Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2011

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# விலையேறப்பெற்ற பொக்கிஷங்கள்

பொன் மற்றும் வெள்ளி • இரும்பு மற்றும் செம்பு

வைரங்கள் • மாணிக்கம், இந்திரநீலம் மற்றும் மரகதம் • முத்துக்கள்

உப்பு • பரலோகத்தில் சேர்க்கப்படும் பொக்கிஷம்

அவர் விலையேறப்பெற்றவர்

விலையேறப்பெற்ற பொக்கிஷங்கள்

# ஆதியிலே



"அவன் கண் விலையுயர்ந்த எல்லாவற்றையும் காணும்" (யோபு 28:10) என்று யோபு எழுதினார். இது உண்மைதான். ஆயினும் தேவன் விலையேறப்பெற்றதாக கருதுவதை மனிதன் விலையேறப்பெற்றதாக கருதுவதில்லை. அநேக ஜனங்கள் பொன், வெள்ளி, பட்டைத்தீட்டப்பட்ட கற்களை "விலையுயர்ந்த பொக்கிஷம்" என்று கருதுகிறார்கள். ஆனால் தண்ணீர், உணவு, ஆடை மற்றும் சுத்தமான காற்று போன்ற அடிப்படை வசதிகள், போதுமான அளவு கிடைத்தால் மட்டுமே இக்காரியம் உண்மையாக இருக்க வாய்ப்புண்டு. சர்வாதிகார ஆட்சிமுறையின் கீழ் இருப்பவர்கள் "விடுதலையை" தங்களுடைய "விலையுயர்ந்த பொக்கிஷமாக" பட்டியலிடுகிறார்கள்.

மனுக்குலம் விலையேறப்பெற்றதாக கருதும் சிலவற்றைக் குறித்து இந்த ஹெரால்டு பிரதி நோக்குகிறது. வேதாகமத்தில் பொன் மற்றும் வெள்ளியின் பயன்களையும், தேவன் அதை மதிப்பிடும் விதத்தையும் குறித்த குறிப்புகளை ***பொன் மற்றும் வெள்ளி*** என்ற தலைப்பு நோக்குகிறது.

எதிராளியோடு போர் புரிவதற்கு பட்டயங்களும் ஈட்டிகளும் இல்லாத வரைக்கும், (1சாமு 13:22) ***இரும்பு மற்றும் செம்பை*** ஒருவராலும், மதிப்பிடமுடியாது. பொதுவாக ஒன்றாக குறிப்பிடப்படும் இந்த இரண்டு உலோகங்களும் ஆட்சிக்குரிய அதிகாரத்தை அடையாளப்படுத்துகிறது.

வைரம் பூமியின் சிறந்த பொக்கிஷமாக காணப்படுகிறது. சகலவிதமான கற்களிலும் இது உறுதியானதும், மிக அழகானதாகவும் இருக்கிறது.

மாணிக்கம், இந்திரநீலம், மற்றும் மரகதம், இந்த மூன்று கற்களும் வைரத்தைப் போல "விலையுயர்ந்ததாக" மூதாதையர்களால் கருதப்பட்டது. இஸ்ரயேலரின் பிரதான ஆசாரியனுடைய மார்பதக்கத்தில் பயன்படுத்தப்பட்ட இந்தக் கற்களுக்கு விசேஷித்த அர்த்தமுண்டு.

இந்த நவீன காலத்தில் "செயற்கை முறையில்" முத்துக்களை உரு வாக்கும் வரையில், உண்மையான ***முத்துக்கள்*** அதிகமாக மதிப்பிடப்பட்டது. முத்துக்கள் இரத்தினங்களாக எண்ணப் படாமலிருந்தாலும், அவைகள் ஆபரணங் களாக அலங்கரிக்கப்பட்டது. கிடைப்பது அரிதாக இருந்ததினால் பாரம்பரியமாகவே அவைகள் அதிக மதிப்பை பெற்றது. நீண்ட காலமாக சிற்பிக்குள் இந்த முத்துக்கள் உருவாக்கப்படுகிறது.

***உப்பு*** விலையுயர்ந்த உலோகம் அல்லது கல்லாக இல்லாதபோதிலும், அது கிடைக்கப்பெறாத இடங்களில், எவ்வளவு முக்கியமான தாது என்பதை உப்பு என்ற தலைப்பு காட்டுகிறது. சீனர்கள் உப்பை பணமாக பயன்படுத்தினார்கள். பழங் காலத்தில் உப்பின் முக்கியத்துவத்தைக் குறித்து இந்தக் கட்டுரை காட்டுகிறது.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் முதலில் காணப்பட்ட ***பரலோகத்தில் சேர்க்கப்படும் பொக்கிஷம்***, என்ற கட்டுரையில் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களுக்கு முக்கியமான காரியங் கள் என்ன என்பதைக் குறித்து பேசப் படுகிறது. பூமிக்குரிய பொக்கிஷங்கள் நம்மிடமிருந்து எடுக்கப்படலாம். ஆனால் பரலோக பொக்கிஷங்களை ஒருவராலும் எடுக்கமுடியாது.

1953ஆம் வருடத்தின் பத்திரிக் கையில் "***அவர் விலையேறப் பெற்றவர்*** " என்று வெளியிடப்பட்ட தலைப்போடு நாம் இந்தப் பிரதியின் முடிவுக்கு வருகிறோம். நமக்கு கிடைக்கக்கூடாததும், மிகப்பெரிய மேய்ப்பராகிய நம்முடைய ஆண்டவராம் இயேசுவே நம்முடைய சிறந்த பொக்கிஷம் என்பதை நமக்கு நினைவுப் படுத்துகிறது.

**செப்டம்பர்-அக்டோபர் 2011**


**ஆதியிலே ....** (விலையேறப்பெற்ற பொக்கிஷங்கள்) 1

**பொன் மற்றும் வெள்ளி ....** 2

பண்டைய காலத்து ஒவ்வொரு நாகரீகத்திலும் மதிப்பு பெற்ற இந்த விலையுர்ந்த உலோகங்கள், வேதாகமத்திலும் மிக அழகான அடையாளங்களாக பயன்படுத்தப்படுகிறது.

**இரும்பு மற்றும் செம்பு . . . .** 6

நீண்ட காலம் செழுமையான வாழ்வுக்குத் தேவைப்படும் உலோகங்களாகிய இரும்பும் செம்புமுள்ள தேசத்தை தேவன் இஸ்ரயேலுக்கு வாக்களித்தார்.

**வைரங்கள் . . .** 10

வைரங்களின் இயற்கையான குணங்களை, உண்மை கிறிஸ்தவர்களின் குணங்களோடு அழகாக ஒப்பிடப்பட்டுள்ளது.

**மாணிக்கம், இந்திநீலம் மற்றும் மரகதம் . . . .** 15

விலையேறப் பெற்ற இந்தக் கற்கள் பிரதான ஆசாரியனின் மார்பதக்கத்தில் காணப்படுகிறது. மேலும் இது பெருமதிப்புக்குரியதாக கருதப்படுகிறது.

**முத்துக்கள் . . . .** 18

குறிப்பிடப்பட்ட விசேஷித்த முத்தைப் பற்றி ஓர் உவமை சொல்லப்பட்டது. இந்நாளிலும், ஐசுவரியமுள்ளவர்கள் முத்துக்களை வாங்குகிறார்கள்.

**உப்பு . . . .** 21

அநேக யுத்தங்கள் நடத்தும் அளவுக்கு உப்பு மிகவும் முக்கியமானதொன்றாக இருந்தது. "உப்பின் உடன்படிக்கையை" பற்றி வேதாகமம் பேசுகிறது.

**பரலோகத்தில் சேர்க்கப்படும் பொக்கிஷம் . . .** 24

பூமிக்குரிய பொக்கிஷம் ஒரே இராத்திரியில் அழிந்து போகலாம். ஆனால் மற்ற பொக்கிஷங்களை நித்தியத்திற்கும் நாம் சுதந்தரிக்கலாம்.

**அவர் விலையேரப்பெற்றவர் . . .** 27

எல்லாவற்றிலும் சிறந்த பொக்கிஷம் - நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்து. அவரே "ஆடுகளின் சிறந்த மேய்ப்பன்"



அனைவராலும் மதிக்கப்படும்

# பொன் மற்றும் வெள்ளி

வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். - ஆகாய் 2:8

Michael Nekora

" . . . பொன் விளையும், அந்தத் தேசத்தின் பொன் நல்லது. " (ஆதி 2:11,12)பொன் வேதாகமத்தில் குறிப்பிடப்படும் முதல் கனிமப்பொருளாகும். பதிவுசெய்யப்பட்ட வரலாற்றில் பொன் மிகவும் உயர்வாக மதிப்பிடப்பட்டது. பழங்காலத்தில் முதல் முதலில் செய்யப்பட்ட பொருட்கள் மிக நேர்த்தியாகவும், அழகாகவும் இருந்தது. பல நூற்றாண்டுகள் கடலின் கீழ் இருந்தாலும் அவைகள் எந்தவிதமான மாற்றமும் அடையவில்லை.

ஆதியில் எந்த விதமான கலப்படமில்லாமல் பயன்படுத்தப்பட்ட உலோகங்கள் - பொன்,வெள்ளி மற்றும் செம்பு. குறிப்பாக பொன் எந்தவிதமான வேதியியல் மாற்றங்களுக்கும் உட்படுவதில்லை. மேலும் பொன் எந்த விதமான உலோகங்களோடும் இணையாமல், தனித்திருப்பதினால் அதை சுத்திகரிப்பதற்கு மிக எளிதானது. ஆனால், அதை உருக்குவதற்கு மிக உயர்ந்தளவு வெப்பம் தேவைப்படுகிறது. (1,063$^{0}$ சென்ட்டி கிரேடு = கிட்டத்தட்ட 2000 டிகிரி பாரன்ஹீட் ஆகும்.) தங்கம் கட்டிகளாக இருப்பதினால் கண்டெடுக்கப் படுவதற்கும், அசுத்தமானவைகளி லிருந்து சுத்திகரிக்கப்படுவதற்கும் எளிதாக இருந்ததினால், ஆவிலா தேசத்து பொன் மிகவும் "நல்லது" என்று சொல்லப்பட்டது.

பலவிதமான நாகரீகங்களில் மற்ற உலோகங்கள் குறைந்தபட்சம் பயன்படுத்தப்பட்டாலும் சரி, பயன் படுத்தபடாமல் போனாலும் சரி, தங்கம் அதன் அழகிற்காக என்றுமே அதிக மதிப்பு பெற்றது. நாணயக்காலத்தைக் குறித்து கோல்டுபாரோ (Reid Goldsborough) என்பவர் அதிகாரப்பூர்வமாக எழுதுகையில், முதல் நாணயம் சுமார் கிமு 600ஆம் வருஷத்தில், மேற்கு துருக்கி பட்டணத்தில் உள்ள லிடியாவில், வெளியிடப்பட்டிருக்கவேண்டும் என்று நம்புகிறார். இந்த நாணயம் பொன் மற்றும் வெள்ளியின் கலவையாக இருந்தது.

பாலஸ்தீனாவில், பொன் விலைக்கு வாங்கப்படும் அளவுக்கு மதிப்புபெற்றிருந்தது. அதற்கு நீண்ட காலம் முன்- "ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயி ருந்தான். " (ஆதி 13:2) என்று நாம் வாசிக்கிறோம். ஆபிரகாம் கிமு 2000 வருடத்தில் வாழ்ந்தவர். வேதாகமத் தில் வெள்ளியைப் பற்றி முதல் முதலில் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாணயங்கள் இல்லாததினால், பொன்னும், வெள்ளியும், எடைக்கு வாங்கினார்கள்.

எந்த விதமான இரசாயன மாற்றங்களுக்கும் பொன் உடன்படாததினால், எந்தச் சூழ்நிலையிலும் துருப்பிடிக்காது. உணவு பொருட்களினாலும், எந்த மாற்றங்களுக்கும் உட்படாததினால் பல் மருத்துவத்தில் பொன் பிரபலமாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால் வெள்ளியை பொறுத்தவரையில் காற்றிலுள்ள இரசாயன பொருட்களினால் மங்கிவிடும்.

சுத்த பொன் நெகிழும் தன்மையுடையது. மெல்லிய தகடாகவும் அடிக்க முடியும், மெல்லிய கம்பியாகவும் இழுக்கமுடியும். ஒரு கிராம் தங்கத்தை இரண்டு மைல் நீள கம்பியாக நீட்டமுடியும். அடுத்து, இப்படிப்பட்ட தன்மைகளை வெள்ளி பெற்றுள்ளது. ஒரு கிராம் வெள்ளியை ஒரு மைல் நீளமாக நீட்டமுடியும்.

பொன்னும் வெள்ளியும், இந்தப் பூமியில் பரந்துவிரிந்திருந்தாலும், இவைகள் மிக அபூர்வமாக காணப்படுகிறது. பூமியின் திடமான இடங்களில், பத்து மில்லியன் பகுதியான இரும்புக்கு, இரண்டு பகுதி வெள்ளி காணப்படுகிறது. பொன் அதிலும் குறைவாக காணப்படுகிறது.

### வேதாகமத்தில் அடையாளமாக பயன்படுத்தப் படும் பொன்

" நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" (வெளி 3:18) என்று லவோதிக்கேயா தூதனுக்கு சொல்லப்பட்டது. இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொன் சொல்லர்த்தமானது அல்ல.

பார்வைக்கு விலையேறப்பெற்றதாக காணக் கூடியவைகளுக்கு பதிலாக உண்மையில் விலை யேறப்பெற்ற காரியங்களை "வாங்கும்படிக்கு" சபைக்கு சொல்லப்படுகிறது. "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்று ஷேக்ஸ்ப்பியர் சொன்னதுபோல, மதிப்புள்ளதாக தோற்றம் அளிக்ககூடியவைகள் மதிப்பற்றதாகவும் இருக்கலாம்.

இந்த உலகம் பொன்னை மிக உயர்வாக மதிப்பிடுகிறது. ஆனால் அதைவிட விலையேறப் பெற்ற

ஒரு காரியத்தைக் குறித்து பேதுரு பேசுகிறார் -"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." (1பேதுரு 1:7) தேவனுடைய பார்வையில் நிரூபிக்கப்பட்ட விசுவாசம், விலையுயர்ந்து எல்லாவற்றிக்கும் மேலாக மதிப்பிடப்படுகிறது. தன்னுடைய சொந்த விசுவாசத்திற்குரிய சோதனையை பற்றி யோபு குறிப்பிடுகிறார் - "ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்." (யோபு 23:10)

பொன் ஆசரிப்புக் கூடாரத்தில் அதிகமாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், மற்றவர்களின் பார்வை படாமல், ஆசாரியர்கள் மட்டுமே காணும்படியாக அந்தக் கூடாரத்துக்குள் பயன்படுத்தப்பட்டது. கூடாரத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்த பொன் மிகுதியாக இருந்தது. இன்னும், சொல்லப்போனால், இஸ்ரயேலர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தபோது, அவர்களிடம் பொன் இருக்கவில்லை. ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள விளக்குத்தண்டு ஒருதாலந்து பசும் பொன்னினால் செய்யப்பட்டது என்று நாம் வாசிக்கிறோம். (யாத் 25:39) இன்று இந்தக் குத்து விளக்கு செய்யப்பட்ட பொன்னின் மதிப்பு கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் டாலராகும்.

ஆசரிப்புக்கூடாரத்தின் உள்புறமும் வெளிப்புறமும், சமூகத்து அப்பம் உள்ள மேஜையும், தூப பீடமும் செங்குத்தாய் நின்ற பலகைகளும் பொன்னினால் மூடப்பட்டது. பொன்னினால் மூடப்பட்ட பலகைகள் பார்வைக்கு பொன்னாக காட்சியளித்தது. ஆனால், எடுத்துச்செல்வதற்கு சுலபமாக இருக்கும். பொன் நெகிழும் தன்மை கொண்டிருப்பதால், ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. பொன் மெல்லிய கம்பிகளாக இழுக்கக்கூடிய தன்மை பெற்றதினால், பிரதான ஆசாரியனின் உடைகள் தங்கக் கம்பிகளினால் நெய்யப்பட்டது. (யாத் 39:2,3)

ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள பொன், பரலோகத்தின் தெய்வீக தன்மையைச் சித்தரிப்பதை தேவன் தெளிவாக கற்பிக்கிறார். ஆசாரியர்கள் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க அனுமதி பெற்றிருந்தார்கள். அதற்குள் இருந்த அழகையும், மதிப்பையும், அவர்கள் மட்டுமே காணமுடிந்தது. புறஜாதியாரின் ஆலயங்களில் இக்காரியம் எதிர்மாறாக நடந்தது. சகல ஜனங்களையும் கவரத்தக்கதாக ஆலயத்திற்குள்ளிருக்கும் எல்லா பொக்கிஷங்களும் அனைவருக்கும் காட்சி பொருளாக வைக்கப்படும்.

காலப்போக்கில் படிப்படியாக நடக்கக்கூடிய மனுக்குலத்தின் மீட்பின் திட்டத்தை ஆசரிப்புக்கூடாரம் சித்தரித்தது. வேதாகமத்தில் உள்ள கடைசி புத்தகத்தில், தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு நகரத்தை போல மனுக்குலம் காட்சி அளிப்பதைக் காணலாம். மேலும், "நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது." (வெளி 21:21) என்று வாசிக்கிறோம். இந்த நகரம் பூமியின் மேல் இருந்தாலும், தெய்வீக ஆசீர்வாதங்கள் பொழியப்படுவதை, தேவன் பொன்னுக்கு ஒப்பிட்டு பேசுகிறார். மேலும், "புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூர்வமாக் குவேன்." (ஏசா 13:12) என்று ஏசாயாவும் கூறுகிறார்.

## வேதாகமம் அடையாளமாக பயன்படுத்தப்படும் வெள்ளி

பூமிக்குரிய உலோகங்களில் பொன்னைக் காட்டிலும் வெள்ளி அதிகமாக காணப்படுகிறது. மேலும் பணத்திற்கு பதிலாக வெள்ளி பயன்படுத்தப்படுவதை பல வசனங்கள் குறிப்பிடுகிறது. ஆர்ஜன்ட்டு (argent) என்ற ஒரே பிரன்ச்சு வார்த்தை பணம் மற்றும் வெள்ளியை பொருள்படுத்தியது. "பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே." (பிர 5:10) என்று சாலமோன் கண்டார். "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்." (1தீமோ 6:10) என்று பவுல் எழுதினார்.

வெகு சீக்கிரத்தில் பூமியின் மேல் வரக்கூடிய மகா உபத்திரவ காலத்தில் பொன், வெள்ளி, பணம் உடையவர்கள் அவைகளைக்கொண்டு தங்களை தப்புவித்து கொள்ளமுடியாது என்பதை வசனங்கள் தெளிவாக காட்டுகிறது. "தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள்; அவர்களுடைய பொன் வேண்டாவெறுப்பாயிருக்கும்; கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது; அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தியாக்கு வதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவதும் இல்லை; அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது." (எசேக் 7:19) பண்டைய காலத்தில் தங்களை காப்பாற்றுவதற்காக பொன்னினாலும், வெள்ளியினாலும், விக்கிரகங்கள் செய்யப்பட்டது. மேல் சொல்லப்பட்ட வசனங்கள் இக்காரியத்திற்கு முரண்பாடானது அல்ல. "அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது." (சங் 135:15)

யோபு பொன்னை சுத்திகரிப்பதற்கு தன்னுடைய அனுபவங்களை ஒப்பிட்டு பேசுகிறார். (யோபு 23:10) அதே காரியத்தை சங்கீதக்காரரும் கூறுகிறார். "தேவனே, எங்களைச் சோதித்தீர்; வெள்ளியைப் புடமிடுகிறது போல எங்களைப் புடமிட்டீர்." (சங் 66:10) தேவன் சிறந்த ஒரு சுத்திகரிப்பாளர் என்று தீர்க்கதரிசியாகிய மல்கியாவும் கூறுகிறார். "அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச்

சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்." (மல் 3: 3) இங்கு சொல்லப்பட்ட காரியங்கள் அனைத்தும், முக்கியமாக கீழக்காணும் பகுதிக்குப் பொருந்துகிறது.

"சேனைகளின் கடவுள் வெள்ளியை சுத்திகரிப்பதற்கு அமர்ந்திருப்பவருக்கு ஒப்பாக சொல்லப்படுகிறது. வெள்ளியை சுத்திகரிக்கும் வேலையில், தன்னுடைய சொந்த வடிவம் அதில் காணப்படும் வரை, உருகக்கூடிய உலோகத்தின் மேல் கண்களை நிறுத்துகிறார். இதுவே அந்த வேலையின் நிறைவாகும். தம்முடைய ஜனங்களை உபத்திரவத்தின் மத்தியில் தேவன் அனுமதிக்கக்கூடிய ஒரு முக்கிய நோக்கத்தை இதிலிருந்து நாம் உணர்ந்துகொள்ளலாம். இப்படியாக, சுத்திகரிக்கும் வேலைகளில், தம்முடைய ஞானத்தை பயன்படுத்தி, அவர் அருகில் அமர்ந்து, தன்னுடைய முழு அன்பையும் சொரிந்து, தன்னுடைய கண்களை அவர்கள் மேல் நிறுத்தி, தம்முடைய மகிமையான சாயல் அவர்கள் பெற்று, சுத்திகரிப்பின் வேலை முழுமை பெறும் வரைக்கும் அவர் நீடிய பொறுமையோடு காத்திருக்கிறார். " - McClintock and Strong, Cyclopedia of Biblical, Theological, and Ecclesiatical Literature, vol. 9, p. 746

ஆசரிப்புக்கூடாரத்தில் பொன் முக்கியமாக பயன்படுத்தப்பட்டிருந்தாலும், அதில் உள்ள பலகைகளின் பாதங்களும், (யாத் 26:19) பூண்களும், பிரகாரத்தை சுற்றியிருக்கும் திரைகளை பிடித்திருப்பதற்கு தூண்களில் இருக்கும் கொக்கிகளும் வெள்ளியினால் செய்யப்பட்டது. (யாத் 27:17)

வெள்ளி எதை அடையாளப்படுத்தும் எனற நேரடியான குறிப்புகள் இல்லை என்றாலும், வேதாகமத்தில் சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளது. " கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது." (சங்கீ 12:6) சத்தியம் (தேவனுடைய வார்த்தை) வெள்ளிக்கு ஒப்பாக சொல்லப்படுகிறது. ஜனங்களின் கவனத்தை திசைத்திருப்ப வெள்ளி பூரிகைகள் பயன்படுத்தப்பட்டது. (எண் 10:2) இப்படியாக, வெள்ளி விசேஷமாக, தேவனுடைய வார்த்தைகளை அறிவிக்க பயன்படுத்தப்பட்டது.

இயற்கையாகவே, பொன் எப்போதும் வெள்ளியுடன் காணப்படும். வேதாகமத்தில் இவைகள் இரண்டும் ஒன்றாகவே குறிப்பிடப்படுகிறது."வெள்ளியைக் குகையும், பொன்னைப் புடமும் சோதிக்கும்; இருதயங்களைச் சோதிக்கிறவரோ கர்த்தர்." (நீதி 17:3) அப்போஸ்தலனாகிய பவுல், மற்ற இரண்டு உலோகங்களை இவைகளோடு ஒப்பிடுகிறார் -" ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள்." (11தீமோ 2:20) வரக்கூடிய இராஜ்யமாகிய தேவனுடைய "பெரிய வீட்டில்" பொன் மற்றும் வெள்ளியுமான வகுப்பார் மிகுந்த கனத்தை பெறுவார்கள். (பரலோகத்தின் ஆசீர்வாதம்) மேலும், மரமும் மண்ணுமான வகுப்பார் சற்று குறைவுள்ள மகிமையை பெறுவார்கள். (பூமிக்குரிய ஆசீர்வாதம்). இவ்வாறாக - சபை, திரள் கூட்டம், முற்பிதாக்கள் மற்றும் உலக ஜனங்கள் இந்த நான்கு வகுப்பாவார்கள். " என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்." (யோவ 14:2) என்று இயேசு பன்னிருவரை நோக்கி கூறினார். பொன் மற்றும் வெள்ளிக்கும் உள்ள வித்தியாசத்தை நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்திலும் விளக்கத்திலும் சொல்லப் படுகிறது. " ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர்; அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது; அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும் அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. நீர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது. " (தானி 2: 31-34) என்று மீண்டுமாக தானியேல் இராஜாவின் சிந்தைனைக்கு இந்தச் சொப்பனத்தைக் கொண்டு வந்தார். " சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே.உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறோரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும். " (தானி 2:38,39) என்று தானியேல் தொடர்ந்து விளக்கம் அளித்தார். உலோகங்களை பயன்படுத்தும்போது பொன்னிலிருந்து துவங்கி தரம் குறைவான உலோகங்கள் பட்டியலிடப்பட்டது. இறுதியாக இரும்பும் களிமண்ணும் கலந்த கலவையோடு முடிவடைகிறது. இங்கு நேபுகாத்நேச்சாருக்கு பின் வந்த அனைவரும் தரம் குறைவானவர்கள் என்பதை தெளிவாக காட்டுகிறது.

### முடிவுரை

வரலாற்றில் காணப்படும் அனைத்து நாகரீகங்களிலும் பொன்னும் வெள்ளியும் மிக மதிப்பு வாய்ந்ததாக இருந்தது.

இவைகள் அரிதானபடியினாலும், பாறைகளிலிருந்து பிரித்தெடுப்பதற்கு மிக கடினமாக இருப்பதினாலும் மனுக்குலத்திற்கு இவைகள் மிக விலையுயர்ந்ததாக இருக்கிறது. ஆனால் "சகல காட்டுஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள்." (சங் 50:10) சகலமும் தேவனுடையதாக இருக்கிறது. அவருடைய ....வையில் விலையேறப்பெற்ற காரியங்கள் என்னவென்பதை கூறுகிறார் - "பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்." (சங் 51:16,17)

நம்முடைய மனதில் தோல்வி அடையாததும், நித்தியமானவைகளின் காட்சிகளைக் கண்டு, மரணம் வரைக்கு விசுவாசத்தில் நிலைத்திருந்தால், மனித இருதயங்களின் கற்பனைக்கு எட்டாத பரிசுகளை பெறுவோம். ஏசாயா கூறினதை பவுல் மிக தெளிவாக குறிப்பிடுகிறார் -"எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்." (1கொரி 2:9,10)

தேவன் நமக்கு இந்தக் காரியங்களை வெளிப்படுத்தினார். பொன் அக்கினியால் சோதிக்கப்படுவதை போல், சிறந்த சுத்திகரிப்பாளரும், மெருகேற்றுபவருமாகிய தேவனுடைய பார்வையில் நம்முடைய விசுவாசம் சோதிக்கப்பட வேண்டும்.

## பழைய பழைமை வாய்ந்த கதை

இரக்கமுள்ள தெய்வீக அன்பினைப் பற்றி,
கதை சொல்ல ஆசிக்கிறேன்.
அத்துணை விநோதமான அன்பை நிரூபக்க வேண்டி,
மகிமையை விட்டிறங்கி வந்தார் இயேசு.

மிகவும் ஆச்சரியமாக தோன்றக்கூடியவைப் பற்றி
கதை சொல்ல ஆசிக்கிறேன்.
அழகாக கற்பனையிலேற்றப்பட்ட காரியங்களும்
அனைத்து நினைவுக்கெட்டாத விஷயங்களின் தொகுப்புப் பற்றி

மனிதரின் காதுகள் கேட்டிராத
கதை சொல்ல ஆசிக்கிறேன்,
தேவனுடைய பரிசுத்த வார்த்தையினின்று
இரட்சிப்பின் நற்செய்தியைப் பற்றி.

நன்கு கற்றுத் தேர்ந்தவர்களுக்கு
கதை சொல்ல ஆசிக்கிறேன்.
வாஞ்சையாய் பசி தாகம் உள்ளவர்களுக்கும்
மற்றவரிடையே கேட்பவர்கள் பற்றி

மகிமையின் காட்சிகளின் போது,
பாடுவேன் புத்தம் புதிய பாட்டை
இதுவே, நான் வெகுநாள் விரும்பின
பழைய பழைமை வாய்ந்த கதை.

- Hymne of Dawn - 116

# இரும்பு மற்றும் செம்பு



நீதிமானுடைய வீட்டில் அதிக பொக்கிஷமுண்டு;- நீதிமொழிகள் 15:6

David Stein

கடற்கொள்ளைக்காரர்களை பற்றியும் அவர்கள் புதைத்து வைக்கும் புதையல்களை பற்றியும் கதைகளை, நம்முடைய சிறுவயதில் கேட்டதை நாம் நினைவில் கொண்டிருக்கலாம். நாமும் அப்படிப்பட்ட புதையல்களை கண்டுபிடிப்பதாக கற்பனை செய்தும் பார்த்திருக்கலாம். ஆனால் பொன், வெள்ளி, மற்றும் விலையுயர்ந்த கற்கள் மட்டுமே புதையலாக எண்ணப்படுவதில்லை. நம்முடைய பூமியில் உள்ள கனிப்பொருட்கள் அனைத்தும், தேவன் நமக்களித்த அற்புதமான சொத்தாகும். ஆனால் பாவம் மற்றும் மரணத்தின் யுகத்தில், இந்தப் புதையல்கள் பெரும்பாலும் தவறாக பயன்படுத்தப்படுவதினால், தேவன் கொடுத்த செல்வங்கள் மனுக்குலத்திற்கு முழுமையான பலனை அளிப்பதில்லை.

இஸ்ரயேலுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களில், மோசேயின் மூலமாக தேவன் கொடுத்த கட்டளைகளுக்கு கீழ்ப்படிபவர்களுக்கு கொடுக்கப்படும் ஆசீர்வாதங்களின் பட்டியல் - " உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார்; அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம்; அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சைச்செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம், அது ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம், அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் ஒன்றும் உனக்குக் குறைவுபடாததுமான தேசம், அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம்;" (உபா 8:7-9)

வேதாகமத்தில் செம்புக்கு பதிலாக வெண்கலம் என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வெண்கலம் - செம்பு மற்றும் சிங்க் (zinc) உலோகங்களின் கலவையாகும். வெண்கலத்தை ஒருவரும் வெட்டி எடுப்பதில்லை. ஆகவே வெண்கலம் என்று சொல்லப்படும் இடங்களில் செம்பு என்ற வார்த்தை வரவேண்டும்.

தேவனுக்கு கீழ்ப்படிந்த ஜனங்களுக்கு, விலையேறப் பெற்ற பொக்கிஷமாகிய இரும்பும், செம்பும் கொண்ட தேசத்தை வாக்களித்தார். கனிமப்பொருட்கள் இல்லாத தேசம், பொக்கிஷமற்ற தேசம் என்று கூறலாம். தங்களுடைய தேசத்தில் இல்லாத மூலப் பொருட்களை பெறுவதற்கு அநேக யுத்தங்கள் நடைபெற்றது. ஆனால் "புதையல்களின்" வடிவத்தில் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு முன்னேற்பாடான காரியங்களை ஆயத்தப்படுத்தியிருந்தார்.

இந்த இரண்டு உலோகங்களும் வசனங்களில் அடையாளமாக பயன்படுத்தப்படுகிறது. இப்படியாக, வேதாகமத்தின் வார்த்தைகளில் உண்மையான புதையல்கள் மறைந்திருக்கிறது. " சில்லாளும் தூபால் காயீனைப் பெற்றாள்; அவன் பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் ஆசாரியனானான்; தூபால் காயீனுடைய சகோதரி நாமாள்." (ஆதி 4:22) என்ற வசனத்தில் இவ்விரண்டும் ஒருமித்து குறிப்பிடப்படுகிறது. பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் காயீனுடைய வழியாக வந்த துூபால் காயீன் ஆசாரியனானான். மூலப்பொருட்களை தன்னுடைய வேலைகளுக்கு பயன்படுத்த மனுஷன் கற்றுக்கொண்டான் என்பதை ஜலப்பிரளயத்திற்கு முன்னுள்ள குறிப்புகள் காட்டுகிறது.

அடுத்து, தேவன் தற்காலிகமாக வாசம் செய்த ஆசரிப்புக்கூடாரத்தில் செம்பைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. ஆசரிப்புக்கூடாரத்தில் பயன்படுத்தப்பட்ட எல்லா உலோகங்களுக்கும் அடையாளமான முக்கியத்துவங்களை கொண்டுள்ளது. இரும்பு எங்கும் பயன்படுத்தப்படவில்லை ஆனால் பொன், வெள்ளி, செம்பு அதிகமாக ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்படுகிறது. மதிப்புமிக்க பொன் அழிவில்லா தெய்வீக சுபாவத்தையும், வெள்ளி சத்தியத்தையும், செம்பு பார்வைக்கு பொன்னைப்போல் இருப்பதினால் பரிப்பூரணமான மனித சுபாவத்திற்கும் ஒப்பிடப்படுகிறது. இந்தச் சுபாவத்தில் தேவனுடைய சாயலில் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான். இந்த அடையாளம், வசனங்களில் பல முறை மீண்டும் மீண்டுமாக குறிப்பிடப்படுகிறது.

இரும்பு யாத்திராகமத்தில் உருவகமாக குறிப்பிடப்படுகிறது. "இந்நாளில் நீங்கள் இருக்கிறதுபோல, தமக்குச் சுதந்தரமான ஜனமாயிருக்கும்படி, கர்த்தர் உங்களைச் சேர்த்துக்கொண்டு, உங்களை எகிப்து என்னும் இருப்புக்காளவாயிலிருந்து புறப்படப்பண்ணினார்.." (உபா 4:20) இங்கு இருப்புகாளவாய் என்பது மிக கொடூரமான அனுபவங்களை அடையாளப்படுத்துகிறது. இரும்பை உருக்குவதற்கு அதிகமான வெப்பம் தேவைப்படுகிறது. (இரும்பு உருகும் வெப்பம் - 2,797, செம்பு உருகும் வெப்பம்

1,984) ஆகவே இது கடினமாக அனுபவங்களின் அளவைக் காட்டுகிறது. ஆனால் இரும்பு உறுதியான உலோகமாக இருப்பதினால், வல்லமைக்கு அல்லது பலத்திற்கும் அடையாளப்படுத்தப்படுகிறது.

**நேபுகாத்நேச்சாரின் சொப்பனம்**

இரும்பு மற்றும் செம்பின் கலவை, அநேக வசனங்களில் காணப்பட்டு, நமக்கு தீர்க்கதரிசனமான பாடங்களையும் கற்பிக்கிறது. இந்த இரண்டு உலோகங்களின் உபயோகங்களை குறிப்பாக நாம் நேபுகாத்நேச்சாரின் தரிசனத்தில் காணலாம். "நான் படுத்துக்கொண்டிருந்தபோது என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னவென்றால்: இதோ, தேசத்தின் மத்தியிலே மிகவும் உயரமான ஒரு விருட்சத்தைக் கண்டேன். அந்த விருட்சம் வளர்ந்து பலத்து, தேசத்தின் எல்லைபரியந்தமும் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது. அதின் இலைகள் நேர்த்தியும் அதின் கனி மிகுதியுமாயிருந்தது; எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது; அதின் கீழே வெளியின் மிருகங்கள் நிழலுக்கு ஒதுங்கினது; அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்துச் சகல பிராணிகளும் அதினாலே போஷிக்கப்பட்டது. நான் படுத்திருக்கையில் என் தலையில் தோன்றின தரிசனங்களைக் காணும்போது, காவலாளனாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக்கண்டேன். அவன் உரத்த சத்தமிட்டு: இந்த விருட்சத்தை வெட்டி, இதின் கொப்புகளைத் தறித்துப்போடுங்கள்; இதின் இலைகளை உதிர்த்து, இதன் கனிகளைச் சிதறடியுங்கள்; இதின் கீழுள்ள மிருகங்களும் இதின் கொப்புகளிலுள்ள பட்சிகளும் போய்விடட்டும். ஆனாலும் இதின் வேர்களாகிய அடிமரம் பூமியில் இருக்கட்டும்; இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு, வெளியின் பசும்புல்லிலே தங்கி, ஆகாயத்துப் பனியிலே நனைவதாக; மிருகங்களோடே பூமியின் பூண்டிலே அவனுக்குப் பங்கு இருக்கக்கடவது.அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி, மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படக்கடவது; இப்படியிருக்கிற அவன்மேல் ஏழு காலங்கள் கடந்துபோகவேண்டும். உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று நரஜீவன்கள் அறியும்படிக்குக் காவலாளரின் தீர்ப்பினால் இந்தக் காரியமும் பரிசுத்தவான்களின் மொழியினால் இந்த விசாரணையும் தீர்மானிக்கப்பட்டது என்றான்.."(தானி 4:10-17)

இந்தக் காட்சி ஆளுகையைப் பற்றி கூறுகிறது. விருப்பமுள்ளவர்களுக்கு ஆளுகையை கொடுப்பதற்கும், திரும்ப வாங்குவதற்கும் தேவன் அதிகாரம் பெற்றவர். தேவன் நேபுகாத்நேச்சாரிடமிருந்து சொல்லர்த்தமான ஏழு வருடங்களுக்கு ஆளுகையின் அதிகாரத்தைத் திரும்ப வாங்கிவிட்ட பின், பராக்கிரமசாலியான அந்த இராஜா மிருகங்களைப்போல பனியில் நனைந்து, மிருகங்களோடே பூமியின் புல்லை தின்றான். அந்த விருட்சம் துளிர்த்து விடாதபடிக்கு இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டது. ஆகவே நேபுகாத்நேச்சார் அந்த ஏழு வருடங்கள் ஆட்சி புரியவில்லை. ஆனால் அந்த ஏழு வருடங்களுக்கு பின் அவன் மரிக்கும் வரையில் மீண்டும் அவன் ஆட்சி புரிந்தான்.

அவிசுவாசத்தினால், இஸ்ரயேலரின் ஆட்சிப்பொறுப்பு நீக்கப்பட்டு, புறஜாதிகளிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டதை இந்தச் சம்பவம் தீர்க்கதரிசனமாகக் காட்டுகிறது. 2,520 வருடங்களுக்கு ஆளக்கூடிய அதிகாரம் இஸ்ரயேலர்களிடமிருந்து நீக்கப்பட்டது. ("ஏழு" காலங்கள் = 7 x 360 நாட்களை கொண்ட தீர்க்கதரிசனமான வருடங்கள் = 2,520 வருடங்களாகும்.) இந்தக் காலத்தின் முடிவில் தேவன் விரும்பக்கூடியவர் ஆட்சியில் அமர்த்தப்படுவார். நம்முடைய ஆண்டவராம் இயேசுவே அதற்கு உரியவர். வெற்றி அடையும் இராஜாவாக அவர் தேசங்களின் மேல் உள்ள அதிகாரங்களை மாற்றி அமைத்து கொண்டிருக்கிறார். (தானி 2:44, வெளி 11:15)

கடைசி யூதா இராஜாவாகிய சிதேக்கியாவின் ஆட்சியில், இஸ்ரயேலில் ஆட்சி உரிமை நீக்கப்பட்டது. தாவீதின் சிங்காசனத்திலிருந்து தொடர்ந்து வந்த ஆட்சி பொறுப்பு தடை செய்யப்பட்டது. இப்படியாக, இரும்பும் வெண்கலமும் உள்ள விலங்கு ஆட்சி பொறுப்பை நீக்குவதை அடையாளப்படுத்துகிறது.

மற்றொரு வசன பகுதியும் இது போன்ற ஒரு கருத்தை எடுத்துக்காட்டுகிறது - "இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும், இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து, உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப்போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப்போலவும் ஆக்குவேன்." (லேவி 26 :18,19) "ஏழத்தனையாக" என்று சொல்லப்பட்ட குறிப்பை கவனியுங்கள். தானியேலில் சொல்லப்பட்ட "ஏழு காலங்களுக்கு" இது இசைவாக உள்ளது. அடுத்து, நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்தில் இஸ்ரயேலின் ஆட்சி பொறுப்பு நீக்கப்பட்டதை எடுத்துக்காட்டும். நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்திற்கும் இந்த வசனப்பகுதி பொருந்துவதாக நிரூபிக்கப்படுகிறது.

மற்றொரு வசனப்பகுதியை நாம் பார்க்கலாம் - "உன் தலைக்குமேலுள்ள வானம் வெண்கலமும், உனக்குக் கீழுள்ள பூமி இரும்புமாய் இருக்கும்.உன்

தேசத்து மழையைக் கர்த்தர் புழுதியும் மண்ணுமாக பெய்யப்பண்ணுவார்; நீ அழியுமட்டும் அப்படியே வானத்திலிருந்து உன்மேல் இறங்கிவரும். உன் சத்துருக்களுக்கு முன்பாக நீ முறிய அடிக்கப்படும்படி கர்த்தர் செய்வார்; ஒரு வழியாய் அவர்களுக்கு எதிராகப் புறப்படுவாய், ஏழு வழியாய் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போவாய்; நீ பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டுபோவாய்." (உபா 28: 23-25)

இஸ்ரயேல் பெற்ற துரதிஷ்ட்டமான தண்டனையாக இருக்கிறது. தேவனுடைய தீர்க்கதரிசி -"நீ கடினமுள்ளவனென்றும், உன் பிடரி நரம்பு இரும்பென்றும், உன் நெற்றி வெண்கலமென்றும் அறிந்திருக்கிறேன்." (ஏசா 48: 4) என்று கூறுகிறார். இஸ்ரயேலர்களின் வணங்காத்தன்மையும், அவர்களின் முரட்டாட்டமுமே அவர்களின் ஆட்சிபொறுப்பின் இழப்பிற்கு காரணமாயிற்று.

இரும்பு வெண்கலமுமான விலங்கை எடுத்து போடுதல் - மீண்டுமாக இராஜ்யபாரத்தை கொடுப்பதற்கு அடையாளமாக இருக்கவேண்டும். இப்பொழுது தாவீதிலும் பெரியவரான இயேசு கிறிஸ்துவின் தலைமையில் ஆட்சி அமர்த்தப்படும். மீட்பின் சங்கீதம் (சங் 107) இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. இந்தச் சங்கீதத்தின் மேலோட்டமான காரியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது -

வசனங்கள் 1-9 : சபையின் விவரங்கள்
கூட்டு பாடல் - வசனங்கள் 8,9
வசனங்கள் 10 -16 : மாம்ச இஸ்ரயேலரின் விவரங்கள்
கூட்டு பாடல் - வசனங்கள் 15,16
வசனங்கள் 17-22 : திரள் கூட்டத்தாரின் விவரங்கள்
கூட்டு பாடல் -வசனங்கள் 21,22
வசனங்கள் 23-32 : உலகத்தை பற்றிய விவரங்கள்
கூட்டு பாடல் - வசனங்கள் 31 , 32
வசனங்கள் 33-43 : இராஜ்யத்தில் நன்மைக்கு ஏதுவாகவும், தீமைக்கு ஏதுவாகவும் மனுக்குலத்தை ஊக்குவிக்கும் காரியங்கள்.

வசனம் 16 -"கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்தாரென்று," என்று வாசிக்கிறோம். இரும்பு, வெண்கலத்திற்கு ஒப்பிடப்படும் புறஜாதியாரின் காலத்தில் உள்ள ஆளுகைகள் முறிக்கப்பட்டது. இஸ்ரயேல் மீண்டும் தன்னுடைய சொந்த இராஜாவை தாவீதின் சிங்காசனத்தில் அமர்த்துவதற்கு காலம் வந்துவிட்டது.

## காயீனுடைய குடும்பம்

காயினுடைய குடும்பத்தை பொறுத்தவரையில் ஓர் அற்புதமான பாடத்தை ஆராய்ந்து அறிந்துக் கொள்ளலாம். மனித வரலாற்றில் காயீன் முதல் கொலையைச் செய்ததினால் அவருடைய குடும்பத்தை குறித்தான எல்லாவிதமான விபரங்களும் நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. தேவனால் அவர் தண்டிக்கப்பட்டு, வெகு சீக்கிரத்தில் அவர் மறக்கப்பட்டிருப்பார் என்று ஒருவர் எதிர்பார்ப்பது தவறு அல்ல. ஆனால், எப்போதும் போலவே, தேவனுடைய தெய்வீக திட்டத்தைப் பற்றியும், அதனுடைய சாட்சியைப் பற்றியும் வரைபடம் இந்தச் சம்பவத்திலும் மிக அழகாக காணப்படுகிறது.

"ஜீவனுக்கு ஜீவன்" என்று பின்பாக கொடுத்த தேவனுடைய பிரமாணத்தின்படி, காயீனை அழிப்பதற்கு பதிலாக, தேவன் காயீனுடைய ஜீவனை காப்பாற்றினார். மேலும், மற்றவர்கள் காயீனை கொன்றுவிடாதபடிக்கு காயீன் மேல் ஓர் அடையாளத்தையும் போட்டார். காயீனுடைய அனுபவங்கள், இஸ்ரயேல் தேசத்தின் அனுபவங்களுக்கு ஒப்பாக உள்ளது. காயீனுடைய பலிகள் அங்கிகரிக்கப்படாததுபோல இஸ்ரயேலர்களுடைய பலியும் அங்கிகரிக்கப்படவில்லை. இயேசுவை கொலைச்செய்த குற்றத்திற்கு இஸ்ரயேலர்கள் பொறுப்பானார்கள். அடையாளமாக ஆபேல் காயீனுடைய இளைய சகோதரனாக இருந்தான். இயேசுவை கொன்றதன் நிமித்தம், இஸ்ரயேலர்கள் நியாயந்தீர்க்கப் பட்டு, தங்களுடைய தேசத்திலிருந்து சிதறடிக்கப்பட்டு, காயீனைப் போல அலைந்து திரிந்தார்கள். ஆயினும் தேவன் அவர்களை பாதுகாத்தார்.

## காயீன் வழியாக வந்த ஏழு தலைமுறைகளைப் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டுள்ளது


(1. காயீன், 2. ஏனோக்கு, 3. இராத், 4. மேகுயயேல், 5. மெத்தூசயேல், 6. லாமேக்கு, 7. யாபால் மற்றும் யூபால் காயீன்) இஸ்ரயேலில் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரைக்கும் அவர்கள் பெற்ற அனுபவங்களை, இந்த வம்ச வரலாறுகள் எதிரொலிக்கிறது. ஏழாம் தலைமுறையை தவிர மற்ற எந்தத் தலைமுறைகளும் எந்த விதமான வருந்துதல்களையும் தெரிவிக்கவில்லை. ஆனால் ஆறாம் தலைமுறையில் வந்த ஏனோக்கின் அனுபவம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் ஒரு கொலையை செய்ததாக ஒத்துக்கொள்கிறார். ஆனால் அந்தக் கொலை எந்தவிதமான பகையின் காரணமாக இல்லாமல், தன்னை தற்காத்துக்கொள்வதற்காக செய்யப்பட்டது என்று அறிக்கையிடுகிறார். இஸ்ரயேலில், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, இயேசுவை கொலைச் செய்த குற்றத்திற்காக அவர்கள் மனம்வருந்துவார்கள். லாமேக்கு அடைந்த மனநிலையை இவர்களும் பெறுவார்கள். அதை தொடர்ந்து அவர்களுடைய குருட்டாட்டம் நீக்கப்பட்டு, சகல ஜாதிகளும் கூட்டிச் சேர்க்கப்பட்டு, அவர்கள் மேல் ஆட்சிப்பொறுப்பை பெற்றுக்கொள்வார்கள். ஏழாம் தலைமுறையில் பலவிதமான நன்மைக்கு ஏதுவான ஆசீர்வாதங்கள் இஸ்ரயேலரின் வழியாக மனுக்குலத்தை வந்து சேரும். இதை அடையாளப்படுத்தும்படியாக, தூபால் - காயீன்

பித்தளை - இரும்பு வேலை செய்வதில் வல்லவனாக இருந்தான். (ஆதி 4:22) சீர்பொருந்தப்பட்ட இஸ்ரயேலின் மேல் இயேசுவின் ஆட்சி திரும்ப கொடுக்கப்படுவதற்கு இந்த அடையாளங்கள் முழுமையாக பொருந்துகிறது. "இரும்பும் செம்பும்" அவர்களை அடக்கி, கட்டுக்குள் வைத்திருந்தபோது அவர்கள் அடிமைகளாக இருந்தார்கள், அதேநேரத்தில் அவர்கள் "இரும்பையும் பித்தளையையும்" வேலை செய்வதற்காக பயன்படுத்தும் ஆசாரியன்களானபோதோ மீண்டுமாக ஆட்சி பொறுப்பை பெறுவார்கள்.

**முடிவுரை**

இரும்பும் செம்பும் பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்படும் பொக்கிஷங்களாக இருக்கிறது. அவைகளை விலையேறப்பெற்ற பொருட்களாக மாற்றுவதற்கு அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. சத்தியத் திற்கும் இதே கோட்பாடு மிக சரியாக பொருந்துகிறது. மனுஷர் புதையல்களை தேடுவதற்கு எவ்வளவு வாஞ்சையாகவும் ஆர்வத்துடனும் முயற்சிக்கிறார்களோ, அதைபோல நாமும் சத்தியத்தை தேட வேண்டும். ஏனெனில், நம்முடைய பரிசு மிக மேன்மையானது. நம்முடைய ஆண்டவரும், போதகருமான இயேசு சகல சத்தியத்தின் களஞ்சியமாயிருக்கிறார். அவருக்குள் இருக்கும் சத்தியத்தின் பொக்கிஷங்களைப் பற்றி பவுல் எடுத்துக் கூறுகிறார். - "அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ் துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் பரியவர்களாகவேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன். அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது." (கொலோ 2:2,3)

உடன்படிக்கை செய்த கிறிஸ்தவர்கள் - தேவனுடைய இரகசியங்களை அறிந்துக் கொள்ளக் கூடிய ஒரு பாக்கியத்தை பெற்றிருக்கிறார்கள். நாம் கிறிஸ்துவினிடத்தில் வரும்போது சகல சத்தியத்தின் ஊற்றண்டைக்கு வந்து, தேவனைப் பற்றிய அறிவை பெற்றுக்கொள்கிறோம். மேலும் இந்த அறிவை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்துவதற்கும் நாம் ஞானத்தை பெறுகிறோம். கிறிஸ்துவுக்குள் புதைந்திருக்கும் ஒரு வாழ்க்கையை நாம் வாழ்ந்தோமானால், தேவனுடைய திட்டத்தைப் பற்றி புதைந்திருக்கும் புதையல்களை நாம் எளிதில் கண்டுபிடிக்கலாம்.



## உண்மை கிறிஸ்தவர்கள்

சம்பத் என எண்ணப்பட்டவர்கள் உண்மை கிறிஸ்தவர்கள்
மிகவும் அரிதாக விநோதமான அபூர்வமானவர்கள்
பூமியின் தூளிலும் உலையான சேற்றிலும்
உலகமோ அவர்களை எண்ண தவறினர்

சிற்பியினுடைய கைவேலையை பொறுத்தல் வேண்டும்
தன் அழகு செதுக்கி வெளியாக்கப்படுவது முன்
அதின் பரிபூரண ஜோதி விளங்கும்
முன் அதன் நிலைமையின் ஒப்பீடுக்கு.

அதிசயமாக எண்ண வேண்டியது வேண்டியதில்லை,
சிற்பியினுடைய செதுக்கும் கையின் விரல்கள்
நம்மை கண்டனத்துக்குள்ளும் சோதனையாகிய
சக்கரத்துக்குள்ளும் நம்மை அழுத்தக்கூடியதாகும்.

அவருடைய பரிபூரண அன்பை உணரவேண்டும்
தேவையில்லாத வலிகள் ஏற்படும் தருவாயில்
நாம் அவரிடம் புகார் செய்யும் முன்னரே
அவரின் ஞானம் அறியும் நம் தேவைகளை.

முழுவதுமாக வெட்டி செதுக்கியதற்கும் பிற்பாடும்,
மாசற்ற ஒளி பொருத்தி தீட்டப்பட்டு,
பிரதிபலிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்
நம் அன்புள்ள பிதாவின் சாயலை

சுத்த பொன் கிரீடத்தினிலே,
ஜொலிக்கக்கூடிய வைரங்களாகிய நாம்,
பிதாவின் கைக்குள் அடங்கி இருந்தால்,
அவருடைய மகிமையை நாம் பிரஸ்தாபிப்போம்.

பொறுங்கள், அன்பானவர்களே முயற்சிக்கிறீர்களா?
உலைக்களம் இன்னும் அனல் பெருகட்டும்,
அவர் வேலைகள் முடிந்த பிற்பாடு,
உண்மை ஜீவன் கிறிஸ்துவுக்குள்
மறைந்திருக்கிறது என்று உணருவீர்.



1,44,001 அனைவரும் வித்தியாசமானவர்கள்

# வைரங்கள்


Ralph Gaunt

சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே,நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே; மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது.- 1கொரிந்தியர் 15:41

நம்முடைய ஆண்டவர் தம்முடைய விலையேறப்பெற்ற பொக்கிஷங்களை இராஜரீகமான ஒரு மகுடத்தில் பொருத்திக்கொண்டிருக்கிறார். பசும் பொன்னினால் செய்யப்பட்ட கீரீடம் தெய்வீக குணத்தை அடையாளப் படுத்துகிறது. அதில் விதவிதமாக வெட்டிடப்பட்டு, மெருகேற்றப்பட்ட 1,44,001 வைரங்கள் பொருத்தப் படுகிறது. இப்படியாக செய்யப்பட்ட அந்தக் கீரீடம் முழுவதும், பரிசுத்தமான வெளிச்சத்தை வீசுகிறது. "அந்நாளில் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனமான மந்தையாகிய அவர்களை இரட்சிப்பார்; அவர்கள் அவருடைய தேசத்தில் ஏற்றப்பட்ட கொடிகளின் கிரீடத்தில் பதிந்திருப்பார்கள்." (சகரி 9:16) தேவன் தம்மேல் விசுவாசமுள்ள ஜனங்களை விலையேறப்பெற்ற கற்களுக்கு ஒப்பிடுகையில், அவர்களின் உண்மையான அழகை அவர் பாராட்டுவதை பொருள்படுத்துகின்றது. இந்த உலகத்தோடு ஒப்பிடுகையில், இப்படிப்பட்ட குணங்கள் "சிறு மந்தைக்கு" மட்டுமே பொருந்துவதாக காண்கிறோம். (லூக் 12:32)

பல கடினமாக பொருட்களைக் காட்டிலும் வைரம் பல மடங்கு கடினமானது. இந்தக் கல் அழிக்கப்பட முடியாதது என்று முன்னோர்கள் கருதினார்கள். "ஆடாமாஸ்" (adamas) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வைரம் என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு வெல்ல இயலாதது என்று பொருள். மற்ற எந்தப் பொருளையும் வைரம் எளிதில் வெட்டும். வீரியமுள்ள அமிலங்களினாலும், வைரத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

குணலட்சனங்களை அடையாளப்படுத்துவதற்கு, வைரத்தின் உறுதியை பயன்படுத்தலாம். நீதியில் நடக்கும் ஒரு தனிநபரின் பாதையை இந்த உறுதிக்கு நாம் ஒப்பிடலாம். மனப்பூர்வமாக நாம் நீதியை பின்பற்றாமல், தேவனுக்கு பிரியமான பொக்கிஷமாக மாற முடியாது.

வைரம் - வெல்ல முடியாதது என்று பொருள்படுவது போல, ஒரு கிறிஸ்தவனும் பாவம் மற்றும் அநீதியினால் வெல்ல முடியாதவராக இருக்கவேண்டும். இவைகளுக்கு எந்தவிதமான வல்லமையும் கொடுக்கப் படக்கூடாது. வீரியமுள்ள அமிலத்தினாலும் வைரம் மாற்றப்படாததுபோல, நீதியில் உறுதியாக இருக்கும் குணலட்சனங்கள் இந்த உலகத்தினால் எந்தவிதத்திலும் மாற்றப்படக்கூடாது. "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான் களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்......." (மத் 5:11,12)

அமிலங்களைப் பற்றி ஜனங்கள் சில காரியங்களை கூறுவார்கள். சில பொருட்களை அமிலம் ஆழமாக எரித்துவிடும், சில பொருட்களை முழுமையாக கரைத்துவிடும். ஆனால் வைரத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை. வைரத்தை அதிகமான வெப்பத்திற்கு உட்படுத்தினால் அது ஆவியாக மாறிவிடும். தாங்க முடியாத அளவுக்கு நம்முடைய சோதனையின் உக்கிரம் மிக அதிகமாக இருந்தால் நாம் அதில் மறைந்துவிடுவோம். நமக்குள் இருக்கும் புது சிருஷ்டியும் உருக்குலைந்துவிடும். ஆனால் நம்முடைய அன்பான தேவன் நம்முடைய திராணிக்குமேல் நமக்கு சோதனை களை அனுமதிப்பதில்லை. (1கொரி 10:13)

சரியான இடத்தில் ஒரு வைரத்தை தட்டினால், அது தெறித்துவிடும். நொறிங்கிய பின்னும் அது வைரமாக இருந்தாலும் வைரத்திற்குரிய மதிப்பை அது இழந்துவிடும். ஆகையால் அதை வெட்டவேண்டிய ஆசாரியன், பல மாதங்களாக வடதிசையில் உள்ள வெளிச்சத்தில், அந்த வைரத்தை ஆராய்ச்சி செய்வார். தேவன் வடதிசையில் வாசம் செய்வதினால், (ஏசா 14:13) வட திசையில் உள்ள வெளிச்சம், தெய்வீக ஞானத்தையும், அறிவையும் அடையாளப்படுத்தும். நம்முடைய பரலோக பிதா, வைரத்தை அறுக்கக்கூடிய சிறந்த கலைத்தேர்ந்த ஆசாரியன். அவர் நம்மை அறிந்தவர். அவருடைய அனந்த ஞானத்தில் நம்மை ஆராய்ந்து, நம்மை அறுக்கவேண்டிய விதத்தை அறிந்து, ஒவ்வொரு குணங்களாகிய முகங்களையும் மெருகேற்றி, மிக அழகான வெளிச்சம் வீசுவதற்கு நம்மை வழிநடத்துகிறார். அதிகமான வெளிச்சத்தை பிரதிபலிப்பதற்காக அவர் மிக **நுணுக்**கமாக அந்தக் கல்லை மெருகேற்றுகிறார். இந்தக் காரியத்தை மிக திறமையோடு செய்யவேண்டும். இல்லாவிட்டால் அதன் முக்கியத்துவமும் விலையுயர்ந்த தன்மையும் வெளிப்படாது.

### வைரத்தின் குணாதிசயங்கள்

**வைரம் அரிதானது** அதுபோல பூமியில் உள்ள ஜனங்களுக்கு மத்தியில் தேவனுடைய பரிசுத்தவான்கள் மிகவும் அரிதானவர்கள். உண்மையில் சத்தியத்தின் தரிசனத்தை கண்டு, தங்களுடைய உடன்படிக்கையை விசுவாசத்தோடு நிறைவேற்றி அனுதினமும் பிதாவின் சித்தம் செய்யக்கூடிய பரிசுத்தவான்கள் மிக அரிதாக

இருக்கிறார்கள். பெந்தேகோஸ்தே நாளிலிருந்து இந்நாள் வரைக்கும் உள்ள வருடங்களை, சபையின் எண்ணிக்கையை வகுத்தால், வருடத்திற்கு எழுபது பேர் மட்டுமே தங்களுடைய அழைப்பை உறுதிப்படுத்திக் கொண்டு, கீரீடத்தை பெறுகிறார்கள். சற்று சிந்தித்துப் பாருங்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தில் சீஷர்களின் எண்ணிக்கை எவ்வளவு குறைவாக உள்ளது. பரிசுத்தவான்களாக அழைப்பை பெற்று, இந்தச் சத்தியத்தை அறியக்கூடிய பாக்கியத்தை பெற்றதினால் சந்தோஷப் படவேண்டும்.

**வைரம் விலையுயர்ந்தது**

ஒரு மனுஷன் விலையேறப் பெற்ற மாணிக்கங்களையும், கற்களையும் தேடுவது போல நம்முடைய பரமபிதா தம்முடைய விலையுயர்ந்த பொக்கிஷங்களைத் தேடுகிறார். நாம் தேவனுக்கு மிகவும் விலையுயர்ந்தவர்கள் என்று உண்மையில் நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறதா ? அவருடைய ஆளுகை எல்லையற்ற அண்ட சராசரத்தின் எல்லா திசைகளில் பரவியிருந்தாலும், அவருடைய அனந்த ஞானத்தினாலும், வல்லமையினாலும், எதை வேண்டுமானாலும் சிருஷ்டிக்கக்கூடியவராக இருந்தாலும், அவர் தம்முடைய "பொக்கிஷங்களை" பற்றி பேசுகையில், அவருடைய கவனம் பரலோக சேனைகளை விட்டு, பூமியின்மேல் நோக்கமாயிருக்கிறது. பாவமும், இருளும் நிறைந்த இந்த உலகத்தில் தம்முடைய மகிமையை பிரதிபலிக்கக்கூடிய ஒருசில கற்களையே அவர் கண்டெடுக்கிறார். " கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது." (சங் 116:15) என்று சங்கீதக்காரன் கூறுவது போல, இவர்களை "அருமையானவர்கள்" என்று அழைக்கிறார். பரிசுத்தவான்கள் இந்த உலகத்திலிருந்து பிரிந்துபோகும் கடைசி தருணமாகிய மரணத்தை பற்றி இங்கு குறிப்பிடவில்லை, மாறாக "மரணத்திற்கான ஞானஸ்நானத்தைப் " (ரோம 6:3-8) பற்றியும், பரிசுத்தவான்களின் முழுமையான அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையையும் இது குறிப்பிடுகிறது. தேவனிடத்தில் பக்தியாகவும், பலியின் ஜீவியத்தில் முடிவுபரியந்தம் விசுவாசத்தோடு நடப்பதே இந்த மரணமாகும். அன்பின் அடிப்படையிலான கீழ்ப்படிதலுள்ள பலியின் ஜீவியமே தேவனுடைய பார்வையில் "விலையேறப் பெற்றது"

**வைரங்கள் தூய்மையானவைகள்**

தூய்மையான வைரங்கள் மட்டுமே ஆபரணங்களில் பயன்படுத்தப்படும், மற்ற வைரங்கள் தொழில் சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு பயன்படுத்தப்படும். தேவனுடைய பொக்கிஷம் மிக தூய்மையாக இருக்கவேண்டும். பூமிக்குரிய நிலையில் நம்மால் பூரண நிலையை அடையமுடியாது என்று நாம் அறிந்திருக் கிறோம். ஆயினும் இருதயத்தில் பரிபூரணமான நோக்கம் முதலில் தேவைப்படுகிறது. முதலாவது இந்தப் பூமிக்குரிய அசுத்தங்களிலிருந்து தன்னை பிரித்துக்கொள்வதே தேவனுடைய பிள்ளைகளில் முதல் கடமையாகும். "ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (11கொரி 6:17) தேவனுடைய உதவியோடு, நம்மை சுத்திகரிப்பதற்கும், விசேஷமான நம்முடைய இருதயத்தை சுத்திகரிப்பதற்கும் முயற்சிக்கிறோம். நாம் சத்தியத்தை உட்கொள்ளும்போது, அன்பின் மகத்துவத்தை அறிந்துக்கொள்கிறோம். அன்பினால் ஏவப்பட்டு, நம்மை நாம் ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கையில், நம்முடைய இருதயங்கள் நீதியின் அடிப்படையில் உறுதிபட துவங்குகிறது. நாம் கிறிஸ்துவின் நீதியினால் மூடப்பட்டிருப்பதினால், தேவன் நம்மை தூய்மையுள்ளவர்களாக காண்கிறார்.

**வைரம் மிக அழகானது**

மோதிரத்தில் பொருத்தப்படும் ஒரு வைர கல்லின் ஜொலிப்பு, நம்முடைய பார்வையை எளிதில் ஈர்த்துவிடும். அதன் மேல் ஒளிப்பட்டவுடன், அதிலிருக்கும் ஒவ்வொரு பக்கங்கள், பல வண்ணங்களில் அந்த வெளிச்சத்தை பிரதிபலிக்கும். அதை பார்க்கும் போது வியப்பாய் இருக்கிறது. பொதுவாக மிக நேர்த்தியாக வெட்டப்பட்ட வைரக் கல்லுக்கு உட்புறத்தில் ஒரு வெளிச்சம் இருப்பது போல தோன்றும். இதைத் தவிர வேறு எந்தக் கல்லுக்கும் இந்தக் குணத்தை நாம் காண முடியாது. மிக திறமையானவரும், கலைசிறந்த ஓர் ஆசாரியன் மட்டுமே வைரத்தை, தன்னில் தான் ஒளிக்கொடுப்பதை போல தோற்றம் அளிக்கக்கூடிய அளவுக்கு வெட்ட முடியும். அதேபோல நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட பக்தியுள்ள வாழ்க்கையிலும், தேவனுடைய மகிமையை பிரதிபலிக்கவேண்டும். நேர்த்தியாக வெட்டப்பட்டு, மிக அழகாக காட்சி அளிக்கூடிய வைரமும் ஒளியிலிருந்து எடுக்கப்பட்டு, இருளில் வைக்கப்படும் போது அது மறைந்துவிடுகிறது, அதேபோல தேவனை விட்டு பிரிந்தால் நாம் மகிமையற்றவர்களாகிவிடுவோம். ஆகவே தேவனுடைய மகிமையை நாம் பிரதிபலிக்க உண்மையோடும், இருதயத்தில் தூய்மையான விருப்பத்தோடும், நோக்கத்தோடும் இருக்கவேண்டும். "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை." (1கொரி 13:3) என்று பவுல் கூறுகிறார்.

தேவனுடையத் திட்டங்களே அவருடைய மகிமையை பிரதிபலிப்பதினால், தேவனை பற்றியும், அவருடைய திட்டங்களைப் பற்றியும் மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதே, தேவனை மகிமைப்படுத்தக்கூடிய அடிப்படையான காரியமாகும். பிரதிபலிக்கக்கூடிய எந்த விதமான மகிமையும் தேவனிடத்திலிருந்து பிரதிபலிக்கவேண்டும் என்பதை ஒவ்வொரு தேவனுடைய பொக்கிஷங்களும் மனதில் கொள்ளவேண்டும். நமக்கு வெளிப்படுத்தப்பட்ட அவருடைய மகிமையான சத்தியத்தையே நாம் உறுதியாக பற்றிக்கொண்டிருக் கிறோம். " அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி

செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" (1கொரி 4:7) தேவனுடைய பரிசுத்தவான்களை இந்த உலகம் பொக்கிஷங்களாக காண்பதற்கு வாய்ப்பில்லை.

ஆனால் பரலோக பொக்கிஷங்கள் தேவனுடைய கண்களுக்கு தப்புவதில்லை. ஏனெனில் அவர் பார்வையில், அவர்கள் விலையேறப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தம்முடைய இருதயங்களில் விசேஷமாக முழு அர்ப்பணிப்போடும், விருப்பத்தோடும் தேவனுடைய சித்தம் செய்யக்கூடிய தம்முடைய பொக்கிஷங்களை தேவன் கவனத்தோடுக் கண்காணிக்கிறார்.

**வைரங்களின் பிறப்பிடம்**

இந்த விலையுர்ந்த கற்கள் எங்கிருந்து வருகிறது ? ஆபரணங்களில் பொருத்தப்படும்படிக்கு அவைகள் எவ்வாறு மாற்றப்படுகிறது ? மற்ற இடங்களைக் காட்டிலும், ஆப்பிரிக்காவில் வைரங்கள் அதிகமாக காணப்படுகிறது. உலகத்தின் இக்கால நிலைமையை எடுத்துக்காட்டுவதற்கு ஒப்பாக ஆப்பிரிக்காவை "இருண்ட கண்டம்" என்று அழைக்கப்படுகிறது. ஆயினும், விலையுயர்ந்த கற்கள் அங்கு கண்டெடுக்கப்படுகிறது. தேவனுடைய பொக்கிஷமாகிய சபையைக் குறித்து தாவீது தீர்க்கதரிசனமாக கூறுகையில் - " நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது." (சங் 139:14-16)

வைரம் சுத்தமான கரிப்பொருளாகும். ஆனால் வைரத்தை பொறுத்தவரைக்கும், இந்தப் பூமியின் ஆழமான வெப்பத்தில், மிகுந்த அழுத்தத்திற்கு உட்படுத்தப்படும் கரி வைரமாக மாறிவிடுகிறது. " நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது," பொதுவாக கருப்பாகவும், மிருதுவாகவும் அழுக்காகவும் இருக்கும் கரிப்பொருள் மதிப்பற்றதாக இருக்கிறது. ஆனால் மிகுந்த வெப்பத்திற்கும், அழுத்தத்திற்கும் உட்படுத்தப்படும்போது விலையுயர்ந்த தூய்மையான வைரமாக மாறிவிடுகிறது.

அடையாளமாக வெப்பத்தினாலும், அழுத்தத்தினாலும் ஒரு கிறிஸ்தவனுக்குள் விலையேறப் பெற்ற குணங்கள் உருவாகிறது. அப்போது நீதியின்மேல் உள்ள விருப்பம் உறுதிப்பட்டு அவருடைய குணங்களை இன்னும் ஸ்திரப்படுத்துகிறது. " தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்." (சங் 139 :23,24) மற்ற வார்த்தைகளில் சொல்லப்போனால், புகைக் கரியுள்ள சகலமும் வெளியேற்றப்பட்டு விலையுயர்ந்த வைரம் உருவாகிறது.

வைரம், பூமியின் ஆழங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படவேண்டும். ஒரு கிறிஸ்தவர் தான் அனுபவிக்கும் கடுமையான சோதனைகளிலிருந்தும் சுற்றியிருப்பவர்களிடமிருந்தும் உடைக்கப்படுகிறார். வெட்டி எடுக்கப்பட்ட மூலப்பொருள் சிறு துண்டுகளாக உடைக்கப்படுகிறது. ஏனெனில், இந்த உலகத்தை விட்டு பிரித்தெடுப்பது மிக கடினமான வேலையாக இருப்பதினால், நம்மேல் இப்படிப்பட்ட கடுமையான அனுபவங்கள் அனுமதிக்கப்படுகிறது. கோழி முட்டை அளவுக்கு அவைகள் நொறுக்கப்பட்டபின் பல விதமான கட்டங்களில் அவைகள் சீரமைக்கப்படுகின்றது. இப்படியாக, இந்த உலகத்தின் அசுத்தங்களிலிருந்த ஒரு கிறிஸ்தவனை பிரித்தெடுப்பதற்கு பலவிதமான அனுபவங்கள் தேவைப்படுகிறது.

ஆயினும், இப்படிப்பட்ட அனுபவங்கள் உலகப்பிரகாரமான அசுத்தங்களிலிருந்து ஒரு கிறிஸ்தவனை பிரிப்பது மட்டும் அல்ல, எதையாகிலும் பற்றிக் கொண்டு அந்தக் கட்டங்களைக் கடக்கவேண்டியதாக இருக்கிறது. விசேஷமாக இந் நிலையில் உள்ள வைரம், எண்ணெய் பசையுள்ள கொழுப் போடு விரைவில் ஒட்டிக்கொள்ளும் தன்மையுள்ளது. ஆகவே, பிசுபிசுப்பான ஒரு மேஜையின் மேல் இந்நிலையில் உள்ள வைரம் இழுத்து செல்லப்படும்போது, வைரங்கள் மட்டும் அதில் ஒட்டிகொள்ளும் மீதியுள்ள அசுத்தமான காரியங்கள் கடந்து விடும். இந்த மேஜை தேவனுடைய வாக்குத்தத்தங்களை அடையாளப்படுத் துகிறது. கிறிஸ்தவனுக்கு ஏற்படுகிற அனுபவங்களினால் உலகப்பிரகாரமான அசுத்தங்களை விட்டுப் பிரித்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களோடு இறுக பற்றியிருக்கச் செய்கிறது. சொரசொரப்பான வைரம் இந்த வாக்குத்தத்தங்களை மிக உறுதியாக பற்றிக்கொள்ளும், அதே நேரத்தில் உலகப்பிரகாரமான அசுத்தங்களினால் எந்தவிதமான பாதிப்புகளுக்குள்ளும் சிக்காமல், நழுவி விடும்.

மேஜையின் மேல் உள்ள பிசுபிசுப்பான பொருள் அழகான தேவனுடைய வாக்குத்தத்தங்களை அடையாளப்படுத்தக்கூடுமா? என்று நாம் நினைக்கலாம். காந்தத்தோடு இரும்பு ஒட்டிக்கொள்வது போல இந்த வைரம் பசையுள்ள பொருளில் ஒட்டிக்கொள்கிறது. அதேபோல தேவனுடைய பல விதமான வாக்குத்தத் தங்கள், இந்த உலகத்தின் அமைப்புகளின் கட்டுகளி லிருந்து விடுவித்துக்கொள்ள உதவுகிறது.

## கழுவுதல், வெட்டுதல், மெருகேற்றுதல்

சிறு சிறு கற்களிலிருந்து வைரம் பிரிக்கப்பட்டபின், கரடு முரடாக இருக்கும் பக்கங்கள் செதுக்கப்பட்டு, கழுவப்படுகிறது. தேவனுடைய திட்டங்களையும், வாக்குத்தத்தங்களையும் அறிந்துக்கொண்ட ஒரு கிறிஸ்தவன் முதலில் அவன் தன்னை கழுவவேண்டும். "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்." (11கொரி 7:1) ஆனால் தேவனுக்கு முன்பாக தன்னைக் காண்பித்துக்கொள்ளும் அளவுக்கு ஒரு கிறிஸ்தவன் தன்னை தான் சுத்திக்கரித்து கொள்ள இயலாது. ஆகவே நம்முடைய பிரதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்து நாம் பலி செலுத்துவதற்கு முன் நம்மை சுத்திகரிக்கிறார். " தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும். என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.." (சங் 51:1-3, 7-9)

கழுவப்பட்டாலும், இன்னும் வெட்டப்படாததும், மெருகேற்றப்படாததுமான வைரம் சிற்பாசாரியின் கைகளுக்குள் செல்கிறது. அவர் ஒவ்வொரு வைரத்தையும் மிக கவனத்தோடு ஆராய்ந்து பார்க்கிறார். சில பெரிய கற்களை பற்றி அறிந்துக்கொள்வதற்கு சில மாதங்கள் கூட ஆகலாம். ஒரு வைரத்தின் வடிவம் முக்கோணமான பிரமீடுகளை போலிருக்கும். **அவைகள் நான்கு திசைகளிலும் செதுக்கப்படலாம். இதை தவிர வேறு எந்த விதத்தில் பிரிக்கப்பட்டாலும் அது நொறுங்கிவிடும்.** இப்படியாக யேகோவா தேவனின் நான்கு குணங்களாகிய - ஞானம், நீதி அன்பு, வல்லமை - அனைத்தும் கிரியை செய்து கிறிஸ்துவ குணலட்சனங்களை நமக்குள் வளர்த்து, மெருகேற்றும். இந்த நான்கு காரியங்களின் அடிப்படையில், வைரம் வெட்டப்பட வில்லை என்றால், அது நொறுங்கிவிடும். அதன் மதிப்பையும் இழந்துவிடும். ஆனால் நம்முடைய சர்வ வல்லவராகிய தேவன் மேல் நாம் விசுவாசம் வைப்போம். - அவருடைய ஞானமும், நீதியும், அன்பும், வல்லமையையும் நம்முடைய அனுபவங்களில் முழுமையாக சகல கோணங்களிலும் பயன்படுத்தப்படும்.

ஒரு வைரத்தை வெட்டி, சானம்பிடித்து, மெருகேற்றுவதற்கு நீண்ட காலம் செல்கிறது. ஒவ்வொரு வைரத்தையும் அந்தச் சிற்பாசாரி மிக கவனமாக பார்த்து வேலையைத் துவங்குவார். இப்படியாக, ஒரு மனுஷனை செதுக்கி, வெட்டி, சானம்பிடித்து, மெருகேற்றி கிறிஸ்துவின் சாயலை அவனுக்குள் பதிக்க நீண்ட காலம் செல்லும். சில நேரங்களில் சரியான கோணங்களில் வைரத்தை வெட்ட இயலாமல் போய்விடும். அப்போது அந்தக் கல் இளைக்கப்படவேண்டும். காகித அளவிலான பாஸ்பரஸ் புரோன்ஸ் (phosphor-bronze) தகட்டின் ஓரங்களில் ஒலிவ எண்ணெய் கலந்திருக்கும் வைர தூளை தடவி இளைப்பார்கள் அல்லது செதுக்கப்பட வேண்டும். சில நேரங்களில் வேகமாக சுற்றக்கூடிய அந்தத் தகட்டினால் வைரத்தை செதுக்க பல வாரங்கள் செல்லும். அதேபோல ஒரு கிறிஸ்தவனின் குணலட்சணங்களை செப்பனிட நீண்ட நாட்கள் தேவைப் படுகிறது. நாம் மிக விரைவாக, எளிதில் செதுக்கப்பட முடியாது. மற்ற பொருட்களோடு ஒலிவ எண்ணெயை கலந்து வைரத்தை செதுக்க முடியும். இப்படிப்பட்ட கடினமான அனுபவங்களை நம்முடைய சகோதரர்களிட மிருந்து பெறுகிறோம். ஏனெனில் வைரம் வைரத்தை அறுக்கும். உராய்வை குறைப்பதற்காக பயன்படுத்தப்படும் இந்த ஒலிவ எண்ணெய் கிறிஸ்துவ அன்பை அடையாளப்படுத்துகிறது. சகோதரர்களிடம் நாம் பெறும் பலவிதமான அனுபவங்களில் அன்பு தலையிட்டு அந்தச் சூழ்நிலையை கட்டுக்குள் வைக்கிறது. அதேநேரத்தில் ஒரு புது சிருஷ்டியை அழிக்கும் அளவுக்கு அனுபவங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. உராய்வுகளைக் குறைத்தால் அங்குள்ள வெப்பத்தையும் குறைத்துவிடலாம். நம்மிடத்தில் அன்பிருந்தால் நம்முடைய சோதனையான வெப்பம் தணிக்கப்படும்.

வெட்டி, வடிவமைக்கப்பட்டபின் வைரம் பட்டைத் தீட்டுவதற்கு ஆயத்தமாக இருக்கிறது. பட்டைத் தீர்க்கப்படும் அநேக முகங்கள் வைரத்தின் உள்ளான அழகை வெளிப்படுத்தும். வானவில்லின் ஒளியை பிரித்துப், அதை பிரதிபலிப்பதினால், இதனுடைய அழகு மேலும் அதிகரிக்கிறது.

இக்காரியங்களை செய்வதற்கு அதாவது சானைப் பிடிக்கும் சக்கரம் வேகமாக சுற்றும் போது சொரசொரப்பாக இருக்கும் வைரத்தை சானம் பிடிப்பதற்கு கனமான இடுக்கிகள் பயன்படுத்தப்படுகிறது. அந்த வைரத்தில் ஒவ்வொரு பக்கங்களும் சானம் பிடித்தபின் மற்ற பக்கங்களையும் சானம் பிடிக்க, அந்த வைரத்தை வெவ்வேறு பக்கங்களில் தொடர்நது சானம் பிடிக்கவேண்டும். அப்போது வைரத்தின் எல்லா பக்கங்களில் இருக்கும் கோணல் மாணல்கள் உராயப்பட்டு, மிக அழகான வடிவம் உருவாகும்.

இப்படியாக நம்முடைய பரலோக பிதா அவருடைய பார்வையில் மிக அழகான குணங்களை நமக்குள் வளர்த்திட, தேவையான அழுத்தங்களை மிக கவனமாக அனுமதித்து, தம்முடைய அன்பையும், ஞானத்தையும் வல்லமையையும் நீதியையும் வெளிப்படுத்துகிறார். இந்த

வைரத்தைப் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் இடிக்கி தேவனுடைய வல்லமையுள்ள பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்தும். ஏனெனில், நம்முடைய ஒவ்வொரு அனுபவங்களிலும், மிக கவனமாகவும், உறுதியாகவும், சீராகவும் வழிநடத்தப்படுவோம். அப்போது ஒவ்வொரு குணங்களும், படிப்படியாக நமக்குள் உருவாக துவங்குகிறது. கனிவு, பொறுமை, இரக்கம், உண்மை போன்ற குணங்கள், வளர்ச்சி அடைகிறது. பரிபூரண அன்பில் வளர்ச்சி அடையும்போது வைரத்தில் எல்லா பக்கங்கலும் பட்டைத் தீட்டப்படுகிறது.

பட்டத்து அரசி இராஜரீகமான மகுடத்தை சூட்டுகையில், அந்தக் கீரிடத்தின் அழகை, அங்கு வந்திருக்கும் இராஜரீகமான விருந்தினர்களும், உயர்ந்த பதவியில் இருப்போர் மட்டுமே காணமுடியும். ஆகவே 144000 விலையேறப்பெற்ற இரத்தினங்களினால் பொருத்தப்பட்ட அழகான இராஜரீகமான அந்தக் கீரிடம் மனுக்குலத்தினால் என்றுமே காணமுடியாது. ஆனால் தலைமையில் நடகக்கூடிய ஆட்சியின் கீழ் முழு தேசமும் இருப்பதை போல, தேவனுடைய கரத்தின் கிரியைகளாக இருக்கக்கூடிய இராஜமகுடத்தின் ஆட்சியை மனுக்குலம் உணருவார்கள்.

இப்போது பரலோக பிதா தம்முடைய இரத்தினங்களை மகுடத்தில் பொருத்திக்கொண்டிருக் கிறார். ஒவ்வொரு கற்களும் பணித்தீர்க்கப்பட்டபின் மனுக்குலம், அறியாதபடிக்கு அமைதலோடு தங்களுடைய இடத்தில் பொருத்தப்படுகிறார்கள். "நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்." (ஏசா 62:3)

## மகிமையின் கிரீடம்

**. . . . கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்**

**நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய் – ஏசா 62:2,3**



தேவனுடைய கரத்திலிருக்கும் சபை, தெய்வீக வல்லமைக்குள் இருக்கிறது. சபையை மகிமையான கிரீடமாகவும, தேவனுடையஅற்புதமான நித்திய கை வேலையாகவும் தம்முடைய மகிமையை பிரதிபலிக்கும் இந்த வல்லமை எவ்வளவு அழகாக இருக்கும்! எத்தனை ம கி மை ய ா க இ ரு க் கு ம் ! சர்வவல்லமையுளள யேகோவா தேவன், இவ்வவணைத்தையும் தம்முடைய கீரிடத்தில் பதித்து அதில் அழகுக்கு மேல் அழகு சேர்ப்பதற்கு ஆண்டவராம் இயேசுவை ஒரு முக்கிய ஸ்தானத்தில வைத்து ஒன்றோடு ஒன்று பிரதிபலிக்கும்படி சகல ஜனங்களுக்கு தந்த தேவனுடைய சிறந்த கைவேலையாக அழகின் சொரூப மாகவும் நித்திய மகிழ்ச்சியாகவும் காட்சி அளிப்பார்.

Reprints,p.4914

விலையுயர்ந்த கற்கள்

# மாணிக்கம், இந்திரநீலம் மற்றும் மரகதம்

கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்.- ஏசா 61:10



Richard Docter

"பண்டைய காலத்தில் மேற்கத்திய நாடுகளில் உள்ள கிரேக்கர்கள் - நவரத்தினக் கற்களை இரண்டு விதமாக பிரித்தனர் - விலையுயர்ந்தவைகள் மற்றும் சற்று மதிப்பு குறைவுள்ளக் கற்கள். இந்த நவீன உலகத்தில் வைரம், இந்திரநீலம் மற்றும் மரகதத்தை தவிர மற்ற எல்லா கற்களையும் குறைவாக மதிப்பிடுகிறார். இந்தப் பிரிவு விஞ்ஞானத்தின் அடிப்படையில் பிரிக்கப்படாமல், அபூர்வமாக கிடைகக்கூடியதன் அடிப்படையிலும், அதன் தரத்தை பொருத்தே பிரிக்கப்படுகிறது. நிறமற்ற வைரத்தை தவிர மற்ற எல்லா கற்களும் பூரணமாக சுத்திகரிக்கப்பட்ட நிலையில் மிக அழகான வண்ணங்களை உடையதாகவும், சிறிதளவு ஒளி ஊடுருவி செல்லக்கூடியதாகவும், மிக கடினமானதாகவும் காணப்படுகிறது." - Wikipedia, “Gemstone”

பண்டைய காலத்தில் இரத்தினக் கற்களும், இந்திரநீலமும் மிக விலையுர்வாக மதிபிடப்பட்டாலும், "எல்லையற்ற" ஞானத்தோடு ஒப்பிடுகையில், அவைகளை யோபு குறைவாக மதிப்பிடுகிறார். (யோபு 28:16,18) ஞானம் மற்றும் குணசாலியான ஸ்திரீயைக் காட்டிலும் மாணிக்கங்கள் (முத்துக்கள் என்று வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) மதிப்பு குறைவுள்ளது என்று சாலோமோன் கூறுகிறார். (நீதி 3:15, 8:11, 20:15, 31:10) இவ்விரெண்டும் அலுமினியம் ஆக்ஸைடு (corundum) என்ற கடினமான தாதுப் பொருளிலிருந்து உருவாகிறது. அதில் உள்ள அசுத்தங்களின் அடிப்படையில் நிறங்கள் மாறுபடுகிறது. சிவப்பு வகையான கற்கள் இரத்தின கற்கள் அல்லது மாணிக்கங்கள் என்றும் நீல நிறக்கற்கள் இந்திரநீலம் என்றும் அழைக்கிறார்.

மகா நகரத்தின் நான்காம் அஸ்திபாரக் கல்லாக மரகதம் காணப்படுகிறது. (வெளி 21:19) மரகதத்தின் நிறம் தேவனுடைய சிங்காசனத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. "வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று......" (வெளி 4:3) வானவில் ஏழு வண்ணங்களிலிருந்தாலும், அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றினது.

இந்த மூன்று விலையேறப்பட்ட கற்களும் "தீரு ராஜாவை" (சாத்தானை அடையாளப்படுத்தும் குறிப்பு) மூடிக்கொண்டிருந்த மூடலின் ஒரு பகுதியாக இருப்பதை எசேக்கியேல் குறிப்பிடுகிறார்." நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது; நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேளவாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது. "(எசேக் 28:13) இந்தக் கற்களின் மொழிப்பெயர்ப்புகளை பொறுத்த வரைக்கும், மொழிப் பெயர்ப்பாளர்களுக்கு தங்களுக்குள்ளே ஒத்துப் போகிறதில்லை. ஆகையால் எபிரேய பெயருக்கு எந்தக் கல் சொல்லப்பட்டிருக்கிறது என்று நம்மால் சரியாக சொல்லமுடியவில்லை.

### பிரதான ஆசாரியனுடைய மார்ப்பதக்கம்

இஸ்ரயேலின் பிரதான ஆசாரியன் அணிந்திருந்த மார்ப்பதக்கம் மிக அழகாக இருந்தது. மூன்று செங்குத்தான பிரிவுகளை, நான்கு வரிசைகளாக பிரிக்கப்பட்டு, 12 கற்களும் பொன்னில் பொறிக்கப் பட்டிருந்தது. மார்ப்பதக்கத்தின் இரண்டு பக்கங்களும் நியாயப்பிரமாணத்தின் இரண்டு கோணங்களை அடையாளப்படுத்துகிறது - வார்த்தை மற்றும் ஆவி. முன்பக்கம் இருக்ககூடிய மார்ப்பதக்கம் ஆவிக்குரிய பிரமாணத்தை அடையாளப்படுத்துகிறது. அதில் பொருத்தப்பட்டிருக்கும் இரத்தினக் கற்கள் தேவனுடைய உண்மையான "பொக்கிஷத்தை" - (சிறுமந்தை) அடையாளப்படுத்துகிறது. ஒவ்வொரு கற்களின் மேல் ஒவ்வொரு கோத்திரத்தின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தது. இவைகள் பரிசுத்தவான்களின் விசேஷமான குணங்களை நிஜத்தில் அடையாளப் படுத்துகிறது. தேவனுடைய கிருபையினால் நிஜமான இந்த இரத்தினக் கற்கள் நீதியின் பூரண குணங்களை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒரு குறிப்பிட்ட முறையில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது. கீழுள்ள படத்தில் இவைகளை காணலாம்.
(யாத்திராகமம் 28:17-20)

| | வரிசை 1 | வரிசை 2 | வரிசை 3 |
|---|---|---|---|
| 1 | பத்மராகம் | புஷ்பராகம் | மாணிக்கம் |
| 2 | மரகதம் | இந்திரநீலம் | வச்சீரம் |
| 3 | கெம்பு | வைடூரியம் | சுகந்தி |
| 4 | படிகைப்பச்சை | கோகேதகமம் | யஸ்பி |

**மாணிக்கம்**

இரத்தின கற்களில் முதலில் வருவது ஓடம் (odem – strongs 124) இது ஆதாம் என்ற மூல எபிரெய வார்த்தையை கொண்டிருக்கிறது. ஓடம் என்ற வார்த்தையை சார்டிஸ் (sardis) என்று ஜேம்ஸ் மொழிபெயர்ப்பிலும், ரூபி (ruby) என்று புதிய மொழிபெயர்ப்பிலும் காணப்படுப்படுகிறது. இது மாம்ச சிவப்பு நிறம் உள்ளது. ஒரு வேளை இந்த நிறத்தின் அடிப்படையில் தேவன் முதல் மனிதனுக்கு ஆதாம் என்று பெயர்ச் சூட்டியிருக்கவேண்டும். உலக அளவில் இந்தக் கல் மிக சிறந்ததாகவும், மதிப்புள்ளதாகவும் கருதப்பட்டதினால், மார்ப்பதக்கத்தில் முதல் இடத்தை பெற்றுள்ளது என்று சொல்லப்படுகிறது.

தேவன் நம்மை மாம்சம் என்று அறிந்திருக்கிறார். நாம் அனைவரும் "ஆதாமாக" இருக்கிறோம். விழுந்துபோன மாம்சமாக அல்ல, அவருடைய பார்வையில் நீதிமான்களாக இருக்கிறோம். மாம்சத்தின் ஜீவன் சிவப்பான இரத்தத்தில் இருக்கிறதென்று வேதம் காட்டுகிறது. (லேவி 17:11) மார்ப்பதக்கத்தில் இருக்கும் சிவப்பு கல் இக்காரியத்தை அழகாக சித்தரிக்கிறது. இந்த அடையாளம் விழுந்துபோன ஆதாமின் இரத்தத்தை அல்ல, ஜீவனைக் கொடுக்கும் நம்முடைய ஆண்டவரின் பாவமற்ற இரத்தத்தை அடையாளப் படுத்துகிறது. இதுவே வரிசையில் முதலாவது இடம் பெற்றது போல, தேவனோடு நாம் பெறவேண்டிய உறவுக்கு கிறிஸ்துவின் இரத்தமே நம்மை முதலில் வழிநடத்தி, அதன் வழியாக நம்முடைய கிறிஸ்துவ அனுபவங்களைப் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த மூன்று நிறங்களும் ஆசரிப்புக்கூடாரத்தில் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. சிவப்பு, நீலம், இரத்தாம்பரம் (சிவப்பும், நீலமும் கலந்த நிறம்) வெண்பஞ்சு நூலில் இந்த மூன்று நிறங்களினால், மிக அருமையாக சித்திரவேலைகள் செய்யப்பட்டுள்ளது. ஜீவன், பலம், சக்தி, புத்துணர்வு போன்றவைகளும் இரத்தத்தை அடையாளப்படுத்தும். இரத்தசோகை உள்ளவர்கள் பலமில்லாமல் துவண்டு விடுவார்கள்.

மார்ப்பதக்கத்தில் பொறிக்கப்பட்ட கோத்திரங்களின் பெயர்களின் சரியான வரிசை கொடுக்கப்படவில்லை. யூதர்களின் கணிப்பு - (முதல் வரிசை வலது புறம் - இடது புறம்) ரூபன், சிமியோன், லேவி, (2ம் வரிசை) யூதா, தாண், நப்தலி (3ம் வரிசை ) காத், ஆசேர், இசக்கார் (4ம் வரிசை) செபுலோன், யோசேப்பு, பென்யமீன். இது உண்மையானால் ரூபனின் நாமம் மாணிக்கத்தில் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும். மற்ற வசனங்கள் வரிசைப்படுத்தும்போதும், ரூபன் கோத்திரத்தை முதலில் பட்டியலிடுகிறார்கள். பிறப்பின் வரிசையிலும் ரூபன் முதலில் வருகிறார். (ஆதி 35:23) ஆசீர்வாதத்தின் வரிசையிலும் ரூபன் முதல் இடத்தை பெறுகிறார். (ஆதி 49 :3) ஆயினும், கூடார வரிசையில் கிழக்கிலிருந்து வரும்போது யூதா முதலில் வருகிறார். (எண் 2:3) ரூபன் தென் திசையில் கோத்திரங்களை வழிநடத்துகிறார். (10) வெளி 7ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட வரிசையில் யூதா முதல் இடத்தில் வருகிறார். ஆதாம் கீழ்ப்படியாமையினாலே தன்னுடைய இடத்தை இழந்துவிட்டார். அதேப்போல முதலில் பிறந்த ரூபன் தன்னுடைய முதல் இடத்தை தொலைத்து விட்டார். யூதா அதை பெற்றுக்கொண்டார்.

**இந்திரநீலம்**

மூல எபிரெய வார்த்தையான (saw-far) என்ற வார்த்தையை (sapphire) என்ற ஆங்கில வார்த்தையாக உச்சரிக்கிறோம். மாணிக்கம் மற்றும் இந்திரநீலமும் மார்ப்பதக்கத்தில் காணப்படுகிற விலையுயர்ந்த கற்களாக இருக்கிறது. இவ்விரண்டும் பூமியின் தூளில் இருக்கும் (aluminum oxide)அலுமினியம் ஆக்சைடிலிருந்து உருவாகிறது. இவைகள் உருவாகும் விதங்களைக் குறித்து விசேஷித்த அனுபவங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. தொழிற் சாலைகளில் எளிமையான வேலைகளுக்கு பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறது. .(sapphire) என்ற எபிரெய வார்த்தை பழங்காலத்தில் அதன் கடினத் தன்மைக்காக கொடுக்கப்பட்ட பெயர் என்று கருதப்படுகிறது. ஆனால் கடினத் தன்மையை பொறுத்த வரைக்கும் வைரமே மிக கடினமான பொருளாக இருக்கிறது. அதேபோல இந்த உலகத்தில் சாதாரண மனிதர்கள் - விசேஷித்த சூழ்நிலையிலும், ஆவியின் கனிகளினாலும் விசுவாசத்தில் உறுதிப்படுவதினாலும், தேவனுடைய பார்வையில் அழகுள்ள சபையோராக மாற்றப்படுகிறார்கள்.

இந்திரநீலம் தெளிவான நீல நிறத்தில் இருந்தாலும், இதே ஜாதியில் உள்ள விலையுயர்ந்த கற்களில் ஆறு கோணங்களை கொண்ட ஒரு நட்சத்திரம் காணப்படுகிறது. ஆகவே அதை (star sapphire) என்று அழைக்கப்படுகிறது. நீலம், விசுவாசத்தை அடையாளப்படுத்துகிறது. விசுவாசமுள்ள யூதர்களின் வஸ்திரங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது. "நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பேசி, அவர்கள் தங்கள் தலைமுறைதோறும் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவைக் கட்டவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்." (எண் 15:38) என்று கட்டளையிடப்பட்டது. மனுஷன் கட்டாயமாக நிறைவேற்றக்கூடிய வாக்குத்தத்தமாக இது நமக்கு அடையாளப்படுத்துகிறது. ஆகவே நீதியுள்ள குணங்களை தக்கவைத்து கொள்ள ஒருவர் விசுவாசமுள்ளவராக இருக்கவேண்டும்.

இந்திரநீலம் முதலில் இஸ்ரயேலின் தேவனோடு தொடர்புள்ளதாக குறிப்பிடப்படுகிறது. "இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள். அவருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது." (யாத் 24:10)

மார்ப்பதக்கத்தில் முதல் வரிசையில் இருக்கக்கூடிய மாணிக்கம் முதன்மையாக தேவனுடைய குணாதிசயங்களைக் காட்டுகிறது. மேலும் அவரை சார்ந்த குணங்கள் இரண்டாவது வரிசையில் காணப்படுகிறது. மார்ப்பதக்கத்தை பொறுத்தவரையில் இந்திரநீலம் நெருக்கமாக பொருத்தப்பட்டிருக்க வேண்டும். வைரத்தின் கடினத் தன்மையினாலும், அரிதாக

கிடைப்பதினாலும், அழகினாலும், இன்றைக்கும் மற்ற கற்களை விட இது மிக விலையுயர்ந்ததாக கருதப்படுகிறது. பூமியிலிருந்து எடுக்கப்பட்ட வைரம் வெட்டிப் பட்டை தீட்டப்பட்டதினால் பல மடங்கு அளவு, குறைந்திருந்தாலும் அதன் அழகு மிக அதிக அளவில் கூடுகிறது. பழங்காலத்தில் இந்த அளவுக்கு வைரங்கள் பட்டைத் தீட்டப்படுவதற்கு தொழில் நுட்பங்கள் அதிகமாக இல்லாத போதிலும், அக்காலத்தில் இந்த (star sapphire) மிக நேர்த்தியாக காட்சி அணிந்திருக்கவேண்டும். கரு நீல பின்னனியில் இளநீல நட்சத்திரத்திரம் மிக அழகாக மின்னியிருக்கும்.

இந்திரநீலத்திற்கு ஒப்பாக சொல்லப்படும் குமாரன் யார்? என்பதை கண்டுப்பிடிப்பது எளிதான காரியம் அல்ல. ஏனெனில் வரிசையில் வரும் ஐந்தாம் குமாரன் - இரண்டு இடங்களில் வெவ்வேறாக குறிப்பிடப்படுகிறார். ஆனால், ஆதியாகமம் 29,30 அதிகாரங்களில் பிறப்பின் வரிசையில் தாண் வருவதினால், இந்தக் கல் தாணுக்கு ஒப்பாக குறிப்பிடப்படவேண்டும் என்று கருதப்படுகிறது. மாப்பதக்கத்தில் உள்ள 5ம் இரத்தின கல்லாகிய இந்திரநீலம் இஸ்ரயேலுக்கு அதிகமான பிரச்சனைகளை கொடுத்த கோத்திரமாகவும் இருந்தது. ஜாதிகளுக்குள் இருந்த தாண் கோத்திரம் புயல் போன்ற ஒரு வரலாற்றைப் பெற்றிருந்தது. இந்திரநீலம் மிக பளப்பளப்பாகவும் சௌந்தரியமாக இருந்தாலும், அவிசுவாசத்தினால் தாண் கோத்திரம் தன்னுடைய சொத்துரிமைகளை இழந்து, வெளி 7ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட கோத்திர வரிசையில் காணப்படாமல் போனது. இந்தப் பளப்பளக்கும் அழகை பெற்றிருந்த தாண் கட்டுக்கு அடங்காத ஆணவத்தை அடக்காததினால், அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி விழுந்தது போல, இவனும் வீழ்ச்சி அடைந்தான்.

மார்ப்பதக்கத்தில் உள்ள விலையேறப்பெற்ற இரத்தினக் கற்கள் மிக அழகாக இருந்தது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்படும் நிலையை அடையாளப்படுத்தும் சிவப்பு நிற மாணிக்கமாக அங்கு பொருத்தப்பட்டிருந்தது. விசுவாசத்தை அடையாளப்படுத்தும் நீலக் கல்லாகிய இந்திரநீலமும், இராஜரீகத்தை அடையாளப்படுத்தும் இரத்தாம்பரமும், நித்திய ஜீவனை அடையாளப்படுத்தும் மரகதமும், இன்னும் அநேக கற்களும் காணப்பட்டது.

நம்முடைய இருதயத்தில் மறைந்திருக்கும் இந்தப் பொக்கிஷங்கள், வெளிச்சத்திற்கு கொண்டவரப் பட்டு பரலோக பிதாவின் பணிக்காக மெருகேற்றப்படும். நம்முடைய இருதயம் இப்படிப்பட்ட குணங்களை பொக்கிஷங்களாக சேகரித்தால், இக்காலத்து ஏமாற்றங்களும், சோதனைகளும் நமக்கு தற்காலிகமான வலியையும், துக்கத்தையும் ஏற்படுத்தினாலும் அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்தாது. மார்ப்பதக்கத்தில் உள்ள இரத்தினக் கற்கள் சுத்தமானவைகளும், நன்மையானவைகளையும், மேன்மையானவைகளையும், உண்மையானவைகளையும் தேடும்படி நம்மை ஊக்குவிக்கும். தேவனுடைய ஆவிக்குரிய புத்திரர்களாக இருப்பதற்கு இதுவே தகுதியாகும். இவைகளே நம்முடைய உண்மையான பொக்கிஷம். நம்முடைய இருதயங்கள் நித்தியமானவை களினால் மகிமை அடையும்.

## இராஜகுமாரன்


என் பிதா மனைகளும் நிலங்களும் உடையவர்,
உலகத்தின் செல்வங்கள் தம் கையில் அடக்கி,
செம்பு, வைரம், வெள்ளி, பொன்னால்
கஜானா முற்றும் நிரம்பி உள்ளது.

என் பிதாவின் ஒரே குமரன் உலகத்தின் இரட்சகர்,
பாவிகள் மத்தியில் ஏழையாக உலாவினார்,
ஆளுகிறார் மகிமையின் சிங்காசத்தினின்று,
அளிப்பார் நமக்கு ஒரு வாசஸ்தலத்தை.

நான் பரதேசியாய் அலைந்து திரிந்தேன்,
பாவியாக அழைக்கப்பட்டு, பிறப்பால் வேற்றானாக,
தத்தம் செய்யப்பட்டு, என் பேர் எழுதப்பட்டுவிட்டது,
கிரீடத்துக்கும் இராஜரீக உடைக்கும் வாரிசாக.

உலகத்தில் ஏழ்மையாயிருந்தாலும் ஏன் வருத்தம் ?
மகிமையான காரியங்கள் எனக்கு வைக்கப்பட்டிருக்கிறது
எந்தச் சோதனைகளிலும் நான் பாடுவேன்
எல்லா மகிமையும் தேவனுக்கே, நான் இராஜகுமாரன்.

- Harriet E.Buell (1877)



இரத்தினக் கற்கள் மத்தியில் தனித்துவம் வாய்ந்த முத்துக்கள்

# முத்துக்கள்

மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. மத்தேயு 13:45



**Richard Evans**

முத்துக்களின் பயன்கள் மற்றும் அவைகளின் வரலாற்றைக் குறித்து பல்வேறு வல்லுநர்களின் சில கருத்துக்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது -

"உயிருள்ள மிருகங்களைப் போல, இரத்தினங்களுக்குள் முத்துக்கள் தனித்தன்மை வாய்ந்தது. வெண்மையான உருண்டையைப் போல் மட்டும் இராமல் அளவிலும், வடிவத்திலும், நிறத்திலும் விதவிதமான முத்துக்கள் காணப்படுகிறது." - American Museum of Natural History (www.amnh.org)

"பண்டைய காலங்களிலிருந்து, குறைவற்ற பூரணத்திற்கு முத்துக்கள் அடையாளப்படுத்தப்படுகிறது. லத்தீன் மொழியில் முத்துக்கள் என்ற வார்த்தைக்கு "தனித்துவம்" என்று பொருள். ஏனெனில் ஒரு முத்தைப் போல் மற்றொரு முத்து இருப்பதில்லை, ஆகவே தனித்துவம் என்ற பொருள் கொண்ட இந்தப் பெயர் சூட்டப்பட்டது." www.PearlOasis.com

"நத்தை சிப்பி போன்ற முதுகெலும்பற்ற பிராணிகளுக்குள் முத்துக்கள் உருவாகிறது. எரிச்சல் உண்டாக்கக்கூடிய ஒரு சிறிய கல் அல்லது மணல் போன்றவைகள் அந்தப் பிராணியில் ஓட்டுக்குள் நுழைந்து விட்டால், அது முத்தாக மாறிவிடுகிறது. மேன்மையான உட்புறத்தைப் பாதுகாத்துக் கொள்ள (nacer)நேசர் (முத்தின் தாய் என்று அழைக்கப்படுகிறது) என்ற பளப்பளப்பான ஒரு பொருளை அந்தச் சிறிய கல் அல்லது மணலைச் சுற்றி சுரக்கச் செய்கிறது. இப்படியாக அந்தச் சிறியக் கல்லின் மேல் படிப்படியாக படிந்துவரும் நேசர் அருமையான முத்தாக உருவாகிறது. ஒன்றின் மேல் ஒன்றாக படியும் அந்தப் படிமானம், வெளிச்சத்தை பிரதிபலிப்பதன் மூலம் ஒரு மினுமினுப்புள்ள ஒரு தோற்றத்தை உருவாக்குகிறது. இப்படிப்பட்ட ஒரு முத்து உருவாகுவதற்கு குறைந்த பட்சம் ஏழு அல்லது எட்டு வருடங்கள் ஆகலாம். முத்துக்கள் மேன்மையானவைகள். அதிகமாக அணிவதிலிருந்து இதை பாதுகாக்கவேண்டும்."- www.Bernardine. com

இரத்தினக் கற்களை வெட்டிப் பட்டைத் தீட்டுவதற்கான தொழில் நுட்பம் கண்டுப்பிடிப்பதற்கு மனிதனுக்கு அதிக காலம் சென்றது. ஆனால் முத்துக்களின் அழகை வெளியே கொண்டுவருவதற்கு எந்த விதமான செயல்பாடுகளும் தேவைப்படாததினால் சந்தேகத்திற்கு இடமின்றி இரத்தினக் கற்களைப் போல முத்துக்களும் விலையுயர்ந்ததாக மதிப்பிடப்பட்டது.

முத்து என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் ஒரு முறை காணப்படுகிறது. (யோபு 28:18) அதன் எபிரேய வார்த்தையின் பொருள் பனிக் கட்டி அல்லது பளிங்கு கல் என்று பொருள் தரக்கூடியதாக இருக்கிறது. ஆகவே இந்தச் சொல் முத்தைக் காட்டிலும் வைரத்தையே குறிப்பிடக்கூடியதாக இருக்கிறது. எனவே இது ஒரு தவறான மொழிப்பெயர்ப்பாக இருக்கக்கூடும்.

புதிய ஏற்பாட்டில் மத்தேயு, வெளிப்படுத்தலில் முத்துக்களைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு முறை முத்துக்களைப் பற்றி பேசியிருக்கிறார் - " ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்,." (1தீமோ 2:9) பவுலின் காலத்தில் உள்ள பணக்காரப் பெண்கள் முத்துக்களினாலும், பொன்னினாலும் அலங்கரித்து கொண்டார்கள். இரண்டாயிர வருடங்களுக்கு பின்பும் இந்த முத்துக்கள் ஸ்திரிகளால் அதிகமாக விரும்பப்படுகிறது.

மிருகத்தின் மேல் ஏறியிருந்த ஸ்திரியின் ஐசுவரியம்- "அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு" (வெளி 17:4) என்று காண்பிக்கப்பட்டது. அதை தொடர்ந்து வந்த அதிகாரத்தில், ஐசுவரியமுள்ள பாபிலோனின் வீழ்ச்சியைக் குறித்தும் இப்படியாகவே விவரிக்கப்படுகிறது. (வெளி 18:16)

"பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதே யுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் போடா தேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்." (மத் 7:6) என்று இயேசு சொன்னார். இயேசு இங்கு சொல்லர்த்தமான முத்துக்களைப் பற்றி பேசவில்லை என்பது தெளிவாகிறது. ஏனெனில் சீஷர்கள் எந்த விதமான முத்துக்களையும் வைத்திருக்கவில்லை. அப்படியே அவர்கள் வைத்திருந்தாலும், அவர்கள் அதை பாதுகாத்துக்கொள்வதை விட்டு விட்டு, எறிந்துவிட மாட்டார்கள். இங்கு இயேசு முத்துக்களை ஞானத்திற்கு ஒப்பிடுகிறார். மேலும் அவைகள் பரிசுத்தமானவைகள் என்றும் குறிப்பிடுகிறார். யூத சட்டத்தின்படி நாய்களும், பன்றிகளும் அசுத்தமான மிருகங்கள் என்று கருதப்படுகிறது. ஆகவே சுவிசேஷத்தை பகிர்ந்துக் கொடுக்கும் விஷயத்தில் தங்களுடைய நேரங்களை ஞானமாக செலவழிக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அறிவிக்கிறார்.

### விலையுயர்ந்த முத்து

மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான். அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. (மத் 13:45, 46) தங்களுடைய சமுதாய நிலையை வெளிப்படுத்த ஐசுவரியமுள்ள ஸ்திரீகள் இயேசுவின் நாட்களில் முத்துக்களை அணிந்துக்கொண்டார்கள். இவைகளை விற்கக்கூடிய வியாபாரிகள் இருந்தனர். இப்படிப்பட்ட ஒரு வியாபாரியை குறித்து இயேசு ஓர் உவமையைச் சொன்னார். அவர் ஒரு முத்தை பார்த்தாலே அதன் மதிப்பைக் கண்டுப்பிடிக்கும் அளவுக்கு திறமைப் பெற்றவராக இருந்தார். இப்படிப்பட்ட நோக்கம் இல்லாதவர்களுக்கு இதை பற்றி புரிந்துக்கொள்ள முடியாது. ஆனால் "அந்த விசேஷித்த முத்தைக் கண்டீர்களா ? இப்படிப்பட்ட முத்தை நான் இதுவரைக்கும் பார்த்ததே இல்லை. மிக அற்புதமாக உள்ளது." என்ற அந்த வியாபாரி ஆர்வத்தோடு பேசுவதைக் கற்பனைச் செய்து பார்க்க முடிகிறதா ?

"தனக்குள்ளதெல்லாம் விற்ற" அந்த மனுஷன் இயேசுவே. மனுஷனாக வந்து மரணத்தை சுதந்தரித்து, தன்னுடைய இரத்தத்தினால் முழு மனுக்குலத்தை விலைக்கு வாங்கினார். (எபி 2:9) அவருடைய கண்களில் விலை மதிப்புள்ளதாகவும், எந்த விலைக்கும் பாத்திரமானதாகவும் இருந்தது.


அப்படியே, இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கவேண்டும் என்று கூறுகிறவர்கள், பிதா தங்களுக்குமுன் திறந்து வைத்திருக்கும் பரலோக வாய்ப்பின் மதிப்பை உணர முடிகிறதா என்று நிதானிக்க வேண்டும். உண்மையில் அவர்களின் கண் அதைக் கண்டிருந்தால் அந்தப் பரலோக வாய்ப்பைப் பெறுவதற்கு அவர்களுக்குள்ளதெல்லாம் அவர்கள் முழுமையாக விற்றுவிடுவார்கள்.

அதைத் தொடர்ந்து வரும் உவமையும் அதே பொருளை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. "அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். "(மத் 13:44) "வயல் உலகம்" என்று 38ம் வசனம் கூறுகிறது. ஒரு மனுஷன் அந்தப் பொக்கிஷத்தைப் பற்றி அறிந்திருந்தார். ஆனால் மற்றவர் அறியவில்லை. அந்தப் பொக்கிஷத்தைப் பெறுவதற்கு கொஞ்சம் வேலை செய்யவேண்டியதாக இருக்கும் என்று நமக்கு சொல்லப்படுகிறது. பூமியிலிருந்து பொன், வெள்ளி போன்ற விலையுயர்ந்த தாதுப் பொருட்களை வெட்டி எடுக்க வேண்டும்.

அந்த வியாபாரி "நல்ல முத்துக்களைத்" தேடினார், அவர் தேடினதை கண்டுப்பிடித்தார். இந்த இரண்டு உவமைகளும் "அன்றியும், பரலோகராஜ்யம் ..." என்று துவங்குகிறது. சுவிசேஷ யுகத்தில் தேவனோடு தொடர்புக் கொள்ளக்கூடியவர்களுக்கு சிறப்பான பாடம் இதில் உள்ளது. சிலர் தேவனைத் தேடிக் கண்டுப்பிடிக்கிறார்கள். (அப் 17:27) மற்றவர்கள் அவரை தேடாதிருந்தும், அவர்கள் பெறும் அனுபவங்களினால் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்துக் கொள்கிறார்கள். சவுல் தமஸ்குவிற்கு செல்லும் வழியில் நடந்த சம்பவம் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாக உள்ளது. (அப் 9:36)

### பரலோக எருசலேமின் வாசல்கள்

"பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான்.அதற்குப் பெரிதும் உயரமுமானமதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன.பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொருவாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது.." (வெளி 21:10, 12,21 ) பிராங்கு ஷைலோ (Frank Shallieu)இந்த வாசல்களைக் குறித்து சில விபரங்களைக் கூறுகிறார் -




"வாசல்களைப் பொறுத்த வரைக்கும் எந்த விதமான அளவுகளும் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக ஒவ்வொரு வாசலும், ஒவ்வொரு பெரிய முத்துக்களாக இருந்தது. அதற்குள் பிரவேசிப்பதற்கு அதன் நடுவில் பெரிய துவாரங்கள் குடையப்பட்டிருந்தது. ஆகையால் அந்த வாசல்கள் பார்ப்பதற்கு மிக பளப்பளப்பாக இருந்தது. எந்த விதமான விரிசல் இல்லாத முத்துக்களினால் செய்யப்பட்ட வாசல்களை யோவான் கண்டு பிரமித்திருக்கவேண்டும்.

" இயேசுவின் விலையேறப்பெற்ற பலியை இந்த முத்துக்கள் அடையாளப்படுத்துகிறது. இந்த நகரத்திற்குள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும் முதலில் ஈடுபலியின் பாடத்தை கற்றுக் கொள்ளவேண்டும். ஏனெனில் மனிதனாகிய இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்தார் என்ற உண்மையை அறிந்துக் கொள்ளாமல், அந்த வாசலுக்குள் நுழைய முடியாது. நம்முடைய

இரட்சகர் செலுத்தின கிரயத்தையும், அவருடைய மேன்மையான பலியையும் அந்த வாசல்கள் அடையாளப்படுத்துகிறது. இந்தக் காரியம் மத் 13:45, 46ம் வசனங்களில் சொல்லப்பட்ட உவமையை நமக்கு நினைவுப்படுத்துகிறது. "மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்."முதலில் ஆவிக்குரிய சபையையும் அடுத்து இந்த முழு உலகத்தையும் இயேசு விலைக்கு வாங்கினார். (அப் 20:28) ஆகவே ஒவ்வொரு வாசலும் முத்துக்களாக இருந்ததினால், ஒருவரும் கிறிஸ்துவைப் பற்றி அறிந்துக்கொள்ளாமல் அந்த நகரத்திற்க்குள் நுழைய முடியாது. அதே போல ஆலயத்திற்குள் அல்லது ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குள் நுழையும், ஒவ்வொருவரும் முதலில் வெண்கலப் பலிபீடத்தை காணவேண்டும். (1யோவ 2:12, யோவ 3:16) அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவ 14:6) என்று மேசியாவின் பணி சித்தரிக்கப்பட்டது. அதே போல, முத்துக்களினாலான வாசல்கள் - இந்த அடிப்படை சத்தியத்திற்கு நம்முடைய கவனத்தை அழைக்கிறது.

"ஒரு நொடி நாம் நின்று இதைக் குறித்து தியானிப்பது நலமாக இருக்கும். பட்டணத்தின் மதில்கள் 12 அஸ்திபாரக் கற்களின் மேல் உள்ளது. எந்த ஒரு அப்போஸ்தலனும் தனிப்பட்ட முறையில் அந்த நகரத்தை தாங்குவதில்லை. அனைவரும் இணைந்தே ஆதரவளிக்கிறார்கள். ஆனால் பட்டணத்தின் வாசலைப் பொறுத்த வரையில், ஒவ்வொருவருடைய கவனத்தையும் கிறிஸ்துவினிடத்திற்கு அழைத்து செல்கிறது. " அந்தப்படியே நாம் இருதரத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்.அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;." என்ற வசனம் நமக்கு ஞாபகப்படுத்துகிறது. (எபே 2:18,20)

**முடிவுரை**

முத்துக்கள் விலையேறப்பெற்ற பொக்கிஷம். முத்து மற்றும் மார்கிரேட் என்ற பெயர்கள் (margarites என்ற கிரேக்க வார்த்தைக்கு முத்து என்று பொருள் ) - பெண் குழந்தையின் புதிய வரவைப் பெற்றோர் ஆவலோடு வரவேற்பதைக் பொருள்படுத்துகிறது. வசனங்களில் தனித்துவம் வாய்ந்த இந்த முத்துக்கள் தங்கத்திலும் விலையேறப்பெற்ற கற்களிலும் பொருத்தப்படுகிறது. சுமார் 100 வருடத்திற்கு முன் ஜப்பானியர்கள் செயற்கை முத்துக்களை தயாரிக்கும் வரையில், முத்துக்கள் அரிதாக இருந்தபடியால், அவைகள் மிகவும் விலையுயர்ந்ததாக இருந்தது. கிட்டத்தட்ட 2000 வருடங்களாக ஐசுவரியத்திற்கும் சமுதாயத்தில் உயர்ந்த நிலைமைக்கும் அடையாளமாக முத்துக்கள் பயன்படுத்தப்பட்டது. இங்கிலாந்து நாட்டு ராணி உண்மையில், முத்துக்களின் மேல் அதிகம் நாட்டம் கொண்டவளாக இருந்தாள். தரிசனத்தில் யோவான் கண்ட முத்துக்கள் அதிக மதிப்புடையதாக இருந்தது. புதிய எருசலேமின் ஒவ்வொரு வாசல்களாக காணப்பட்ட அந்தப் பிரமாண்டமான முத்துக்கள் உயிர்த்தெழுதலையும், மனுக்குலத்தின் சீர்பொருந்துதலையும் மிக அழகாக சித்தரிக்கிறது. விலையேறப்பெற்ற முத்தை நாம் கூடுமான அளவு பயன்படுத்தினால், தேவ இராஜ்யத்தின் நித்தியமான சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கலாம்.

## பரலோகம் - நம் வீடு



நம் குழந்தை பிராயத்தில், பரலோகம் என்றால்,
முத்து பதித்த கதவுகளும், பொன் வீதிகளும்,
மிகவும் தொலைவில் உள்ள ஒன்று,
வாயில்கள் திறக்கப்படும் குறிப்பிட்டு
மிகவும் தொலைவான நாளினிலே.
வருடங்கள் கடந்து செல்ல செல்ல,
மெல்ல மெல்ல வாழ்க்கையில் இலை உதிர,
கண்ணீர் தேங்கி கண்களை மந்தப்படுத்தி,
இருதயங்களை ஆழ்ந்த துக்கம் நிரப்பி,
அப்பால் முத்து பொதித்த கதவுகளிலே பார்த்து,
இருட்டான மேகமாகிய விசனம் அப்பால்,
பிரியமானவர்கள் காக்கக்கூடிய இடத்தைப் பார்த்து,
நிலவும் ஆசீர்வாதங்களும் வெளிச்சமும்,
அனைத்திற்கும் மேலாக காண்போம் முகத்தினை
நம்மை நம்முடையவர் ஆக்கி கூட்டிச்சேர்த்தவர்,
தூரமான தொலைவான இடத்துக்குச் செல்லவில்லை,
பரலோகம், நம் வீடு.

Sue. H. McLane

வாழ்க்கைக்குத் தேவையானது

# உப்பு



அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.- கொலோசேயர் 4:6

உப்பு மிகவும் மலிவாக இருப்பதினால் அநேகர் உப்பைக் குறைவாக மதிப்பிடுகிறார்கள். ஆனால் பண்டைய காலத்தில் உப்பு மிகவும் விலையுயர்ந்ததாக மதிக்கப்பட்டது. தங்கத்திற்குப் பதிலாக இது வியாபாரம் செய்யப்பட்டது. ஆதிகால சீனர்கள் உப்பை நாணயங்களாகப் பயன்படுத்தினார்கள். மத்தியத் தரைக் கடல் பகுதியில் வாழ்ந்த சிலர் உப்புக் கட்டிகளை ரூபாய் நோட்டாக பயன்படுத்தினார்கள். பழங்காலத்தில் அநேக முக்கிய வழிகள் (Highway) உப்பை எடுத்துச் செல்வதற்கு பயன்படுத்தினார்கள். "salary "என்ற ஆங்கில வார்த்தை "sal " என்ற உப்புக்கு பயன்படுத்தும் லத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது.

பழங்காலத்திலிருந்து பதப்படுத்துவதற்கு உப்பு பயன்படுத்தப்பட்டது. "ருசியில்லாத பதார்த்தத்தை உப்பில்லாமல் சாப்பிடக்கூடுமோ? " (யோபு 6:6)

கிட்டதட்ட ஆயிரவருடங்களாக உப்பு உணவைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. விசேஷமாக மாம்ச உணவை பாதுகாக்கப் பயன்பட்டது. முதலில் அந்த உணவிலிருந்து ஈரப்பதத்தை முற்றிலுமாக எடுத்தபின், அதாவது கிருமிகள் பெருகுவதற்காக பயன்படும் தண்ணீரை முதலில் அகற்றிவிட்டு அதற்குபின் உப்பிடப்பட்டது.

தேவன் நமக்களித்த ஆசீர்வாதங்களை அளவிடுகையில், உப்பை நாம் கணக்கிடுவதில்லை. ஆனால் "நெருப்பு, நீர், இரும்பு மற்றும் உப்பு ஆகிய நான்கு ஆசீர்வாதங்களை தேவன் அனுப்பினார் என்று இஸ்லாமிய தலைவர் அறிவிக்கிறார். பழங்காலத்து எபிரெயர்கள் உட்பட பல மதங்களில் உப்பு ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

லோத்து மனைவியின் மரணத்தைக் குறிப்பிடுகையில், வேதாகமத்தில் முதல் முறையாக உப்பைப்பற்றி சொல்லப்படுகிறது. (இது கடல் உப்பு அல்ல) லோத்தும், அவருடைய மனைவி மற்றும் இரண்டு குமாரத்திகளும் சோதோம் அழிக்கப்படும்போது அந்த பட்டணத்தை விட்டு ஓடுகையில் "அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள்." (ஆதி 19:26) தேவன் அற்புதமான முறையில் லோத்தின் மனைவியை உப்பு துாணாக்கினார் என்று சிலர் எண்ணலாம். ஆனால் லோத்தின் குடும்பம் அந்த பட்டணத்தை விட்டு வெளியே வரும் வரைக்கும் அந்த உண்மையான அற்புதம் நடக்கவில்லை (சோதோமின் அழிவு) லோத்தின் மனைவி நின்ற நிலையில் உயரமான துாணானாள் என்று வேதம் சொல்லவில்லை. அவள் பின்னிட்டு பார்க்கையில், தடுக்கி விழுந்தபின் அவள் மேல் கந்தக உப்பு படிந்து கீழே கிடந்த ஒரு "துாணை" போலானாள்.

தீர்க்கதரிசியாகிய எலிசா உப்பைப் பயன்படுத்தி ஓர் அற்புதத்தை நிகழ்த்தினார் "பின்பு அந்தப் பட்டணத்தின் மனுஷர் எலிசாவை நோக்கி: இதோ, எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது; தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம் என்றார்கள். அப்பொழுது அவன்: ஒரு புதுத்தோண்டியை எடுத்து, அதிலே உப்புப்போட்டுக் கொண்டுவாருங்கள் என்றான்; அதை அவனிடத்தில் கொண்டுவந்தபோது, அவன் நீரூற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு: இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். எலிசா சொன்ன வார்த்தையின்படியே அந்தத் தண்ணீர் இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று." (11இராஜ 2:19-22) உண்மையில் அந்த உப்பு தண்ணீரைக் குணப்படுத்தவில்லை. தேவன் எலிசாவின் கைகளின் வழியாக அந்த அற்புதத்தை நடப்பித்தார். கடவுள் சொல்லியிருந்தால் அந்தத் தண்ணீரை அடித்து அல்லது பேசியோ, எலிசா அந்த அற்புதத்தை நடத்தியிருக்கலாம். உப்பு தண்ணீர், மனிதன் குடிப்பதற்கு தகாததாக இருந்தபோதிலும், இந்த அற்புதத்தில் குடிப்பதற்கு தகுதியற்ற தண்ணீர், உப்பை சேர்த்தபின் குணமானது.

இராஜ்யம் துவங்கும்போது இராஜாக்களும் ஆசாரியர்களாக இருக்கும் சபையின் போதனைகள் (உப்பு) உபதேசிக்கப்படுகையில் அனைவரும் அற்புதமாக குணப்படுவார்கள் என்பது இந்த அற்புதத்தின் ஒரு வகையான விளக்கம். "பூமிக்கு உப்பானவர்கள்" என்று அழைக்கப்படுகிறவர்கள் ஆசீர்வதித்து, போஷித்து மனுக்குலத்தை சீர்பொருந்தச் செய்து, ஜீவனுக்குரிய ஆசீர்வாதங்களையும் சத்தியத்தையும் கொடுத்து மரித்த உலகத்தை உயிர்த்தெழுப்புவார்கள். உப்பின் "புது தோண்டி" - சபை புதிதான அழியா ஜீவனுக்குள் இருப்பதைக் காட்டுகிறது. இவர்கள் மனுக்குலத்திற்கு மதுரமான ஜீவத் தண்ணீரை கொடுப்பார்கள்.

### உப்பின் உடன்படிக்கை

உப்பு மிருக பலிகளோடு செலுத்தப்பட்டது. " நீ பாவநிவாரணத்தை முடித்தபின்பு, பழுதற்ற ஒரு இளங்காளையையும், பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் மந்தையிலிருந்தெடுத்துப் பலியிடுவாயாக. அவைகளைக் கர்த்தருடைய சந்நிதியில் பலியிடுவாயாக; ஆசாரியர்கள் அவைகளின்மேல் உப்புதூவி, அவைகளைக் கர்த்தருக்குத் தகனபலியாக

இடக்கடவர்கள்." எசே 43:23,24 " 2. நீ படைக்கிற எந்த போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக; உன் தேவனுடைய உடன்படிக்கையின் உப்பை உன் போஜனபலியிலே குறையவிடாமல், நீ படைப்பது எல்லாவற்றோடும் உப்பையும் படைப்பாயாக." (லேவி 2:13) இவ்விரண்டும் உடன்படிக்கைக்கு தொடர்புள்ளதாக இருக்கிறது.

"உப்பின் உடன்படிக்கையைப்" பற்றி வேதத்தில் மற்றும் இரண்டு குறிப்புகள் உள்ளது ." இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கிற பரிசுத்த படைப்புகளையெல்லாம் உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன்; கர்த்தருடைய சந்நிதியில் இது உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் சொல்லும் மாறாத உடன்படிக்கை என்றார்." (எண் 18:19) "இஸ்ரவேலை என்றைக்கும் ஆளும் ராஜ்யபாரத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையாய்க் கட்டளையிட்டதை நீங்கள் அறியீர்களா?" (11நாளா 13:5)

இரண்டு குழுவினர்களுக்கு இடையில் ஏற்படும் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதற்கு, இரு தரப்பினரும் உப்பை உட்கொள்வதே உப்பின் உடன்படிக்கையாகும். இது ஒரு நித்திய உடன்படிக்கையாக இருந்தது.

எஸ்றாவின் புத்தகத்தில் விசுவாசம் மற்றும் பக்தி வைராக்கியத்திற்கும் "உப்பு" அடையாளமாக குறிப்பிடப்படுகிறது. "இப்போதும் நாங்கள் அரமனை உப்புத் தின்கிறபடியினால், ராஜாவுக்குக் குறைவுவரப் பார்த்திருக்கிறது எங்களுக்கு அடாதகாரியம்; ஆகையால் நாங்கள் இதை அனுப்பி, ராஜாவுக்குத் தெரியப்படுத்துகிறோம்." (எஸ்றா 4:14)

**அக்கினியினால் ஒப்பிடுதல்**

"உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப் போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப்பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படுவதுபோல, எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுவான்.." என்று இயேசு ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார். (மாற் 9:43-49)

நரகம், நித்திய அக்கினியையும், சாவாத புழுக்களையும் கொண்டிருப்பதாக தோன்றுகிறது. ஆயினும் கையை வெட்டுதல், அல்லது காலை வெட்டுவது போன்ற கடுமையான முடிவுகளை தவிற்க வேண்டுமானால் அநேக எடுத்துகாட்டுகளை வசனங்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் ஒருவருக்கும் இப்படிப்பட்ட காரியங்கள் சம்பவிக்கவில்லை. மேலும் இப்படிப்பட்ட காரியங்களை இயேசு தன்னுடைய எதிராளிகளோடும், பொதுவான உலகத்தோடும் பேசாமல், சீஷர்களோடு பேசினார்.

தங்களையே மிக உயர்வாக எண்ணினதால் இயேசு பன்னிருவரையும் கடிந்துக்கொண்டார். (மாற் 9:38) மேட்டிமையாக எண்ணுவது, பெருமை, பேராசை போன்ற குணங்கள், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசியாதபடிக்கு தடைச் செய்யும். உண்மையில், தவறான காரியங்களை அறிந்து செய்பவர்களுக்கு, கெஹன்னாவை அடையாளப்படுத்தும், அதாவது இரண்டாம் மரணம் நேரிடலாம்.

நம்முடைய கைகள் அல்லது கால்களைப் பற்றி இயேசு இங்கு பேசவில்லை என்பது மிகத் தெளிவாக தெரிகிறது. ஏனெனில், நம்முடைய கைகளோ, கால்களோ, தனிப்பட்ட முறையில் பாவம் செய்வதில்லை. நம்முடைய இருதயமே காரணமாக இருக்கிறது. " நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்." (லூக்க 6:45)

எஜமானுக்கு விசுவாசமுள்ளவர்கள் போல அவர்கள் நடித்திருக்கலாம். ஆனால் காலப் போக்கில் ஒவ்வொரு சீஷரும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அக்கினியினால் உப்பிடப்பட்டார்கள். இந்தக்குறிப்பு மாற்கு சுவிசேஷத்தில் மட்டுமே காணப்பட்டாலும், பவுலும், பேதுருவும், விலையேறப்பெற்றதை நிர்ணயிப்பதற்கு நெருப்பை ஒப்புமையாக பயன்படுத்தினார்கள். "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்." (1கொரி 3:13), "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று..." (1பேது 4:12) திகைக்கவேண்டாம் என்று பேதுரு கூறுகிறார்.

மாற்கு 9:49ம் வசனத்தில் இயேசு குறிப்பிட்ட "ஒவ்வொரு பலியும்" ரோமர் 12:1 வசனத்தில் சொல்லப்பட்ட அங்கிகரிக்கப்பட்ட பலியை குறிப்பிடுகிறது - "உங்கள் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்..." ஆகவே, "ஒவ்வொரு சீஷரும் பொறிப் பறக்கும் கடும் சோதனைகளுக்கு உட்பட்டு, பலியின் சுகந்த வாசனையையும், தேவனுக்கு பிரியமான உப்பிட்ட பலிகளை செலுத்தவேண்டும்" என்று நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகளைக் குறிப்பிடலாம் என்று (A Commentary, Jamieson, Fausset, and Brown, vol. 3, p. 177) ஒரு விளக்கவுரை கூறுகிறது.

கேடான கைகளை, யூதாஸ் கொண்டிருந்தான் என்பதில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை. என்ன நடந்திருக்க வேண்டும் ? நிச்சயமாக அவன் கை வெட்டப்பட்டிருக்க வேண்டும் அல்லவா ? அவிசுவாசமான செயலுக்கு உடனடியான தண்டனைக் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும் அல்லவா ? எஜமானோடு ஒரே பந்தியில் புசித்து, "உப்பின் உடன்படிக்கையை" ஏற்படுத்தின பின், இறுதி வரைக்கும் விசுவாசமாக இருக்கவேண்டிய அவன் உடன்படிக்கையை முறித்து விட்டானே.

" உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப் போனால், அதற்கு எதினாலே சாரமுண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும் இருங்கள் என்றார்." (மாற் 9:50) "உப்பு" பாதுகாப்பதற்கும் பதப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில் சீஷர்கள் அடையும் பதவிக்கு தடையாக இருந்த அல்லது கெட்டுப் போகக்கூடியவைகளைப் பாதுகாக்க ஏதோ ஒன்று தேவைப்பட்டது. ஒருவருக்கொருவர் சமாதானத்தோடிருப் பதற்கு பதிலாக, யார் பெரியவர் என்ற போட்டி உருவானது. மற்றவர்களின் சிந்தையை அறிந்த யோவான் இந்தக்காரியத்தை வெளிப்படையாக பகிர்ந்து கொண்டிருக்கவேண்டும். உண்மையான கிறிஸ்தவர் களுக்கு மாதிரியாக இருக்கவேண்டியவர்கள், பரிசேயர், சதுசேயர்கள் போல நடந்து கொண்டனர்.

**நமக்குள்ள பாடம்**

நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் இருளிலிருந்து வெளிச்சத்தின் நிலைக்கு அழைத்துவரப்பட்டிருக்கிறோம். "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். " (1பேது 2:9)

மிக பெரிதான இந்தப் பணிக்கு தங்களை அர்பணித்தவர்கள் தங்களுடைய எஜமானனைப் போல ஒரே சிந்தையில் இருக்கவேண்டும். "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளை யெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்." (லூ 14:33) உங்களுக்குள்ளவைகள் அனைத்தையும் விட்டு விட்டீர்களா ? அல்லது இந்த உலகத்தில் சில காரியங்கள் அல்லது சிலரை உங்களால் விடமுடியவில்லையா? நீங்கள் உங்கள் "வலது கரத்தை" நேசிப்பதை போல எதையாகிலும் நேசிக்கிறீர்களா ? அப்படியானால் அதை வெட்டிப் பேடலாமே. இல்லாவிட்டால் நீங்கள் இயேசுவுக்கு சீஷனாக இருக்க முடியாது. இல்லாவிட்டால் நீங்கள் சாரமற்ற உப்பைப் போலிருப்பீர்களே!.

நிஜமான "லேவியின் புத்திரர்களின்" மெருகேற்றப்படும் அனுபவங்களைப் பெறக்கூடிய காலமாக இது இருக்கிறது. "ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார். " (மல் 3:2,3)

எல்லையில்லா இந்த அண்டசராசரத்தில் ஒரு தூசிக்கு ஒப்பிடப்படுவதற்கும் இயலாதவர்களாகிய நம்முடைய ஜீவன் மிக குறுகியது. சில வருடங்கள் நீடித்திருக்கும் தற்காலிகமான நன்மைகளுக்காக நித்தியமான பரலோக பரிசை விட்டுக் கொடுக்க முடியுமா? நிச்சயமாக இல்லை !

" தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்." (மத் 16 -25) முரண்பாடான வாக்கியம் போலிருந்தாலும், இது உண்மையான ஒரு காரியமாக இருக்கிறது. நம்முடைய ஜீவனை சத்தியத்தின் பணிக்காகவும், சகோதரர்களின் நிமித்தமும் இழக்கும் பட்சத்தில் அதை நித்தியமாக பெற்றுக்கொள்ளுவோம். ஆனால் இந்த உண்மையை இந்த உலகம் நோக்குவதில்லை. நாம் தவறாக கூறுகிறோம் என்று எண்ணி நம்மை துன்பப்படுதுகிறது. ஆகவே "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்;சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார் களே.." (மத் 5:11,12) என்று நமக்கு ஆறுதல் உண்டாக இயேசு கூறினார்.

பரலோகத்தின் பந்தையப் பொருளை பெற்றுக்கொள்வதை - முடிவு பெறும்வரைக்கும் ஓடக்கூடிய ஓர் ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிடப்படுகிறது. (1கொரி 9:24) ஆனால் சகோதரர்களோடு இடுக்கமான பாதையில் நடக்கையில் நாம் ஜீவனை பெறுவதாக வாசிக்கின்றோம். (மத் 7:14) இது பந்தயமாக சொல்லப்படவில்லை. ஏனெனில் பந்தயத்தில் ஒருவரே வெற்றி பெற முடியும். நம்முடைய சகோதரர்களும் கிறிஸ்துவுக்குள்ளான பரம அழைப்பின் பந்தயப்பொருளை பெறுவதற்கு, முடிந்த வரைக்கும் நாம் உதவி செய்யவேண்டும். மேலும் மற்றவர்களின் நலன்களைத் தேடும்போது நாம் கண்ணியில் அகப்படாதபடிக்கு எச்சரிக்கையோடு செயல்படவேண்டும். நம்மை காட்டிலும் அதிகமாக தேவ பணிச் செய்யும் - "நம்மை சேராதவர்கள்" அல்லது "நம்மோடிராதவர்களை" - குறித்து நாம் ஒருபோதும் தவறாக விமர்சிக்க வேண்டாம்.

நம்முடைய அழைப்பையும், தெரிந்துக் கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வோம். (11பேது 1:10) உப்பால் சாரமேறிய நம்முடைய பேச்சுக்கள், நாம் சந்திக்கக்கூடிய சகோதரர்களை இடுக்கமான வாசல் வழியாக செல்வதற்கு ஊக்குவிக்கக்கடவது.

# பரலோகத்தில் சேர்க்கப்படும் பொக்கிஷங்கள்



பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.
- மத் 6:19-21

மகிழ்ச்சி, சந்தோஷம், ஆனந்தம், நிம்மதி அனைத்தும் "பொக்கிஷம்" என்ற வார்த்தைக்குள் அடக்கப்பட்டுள்ளது. நம்முடைய சிந்தைகள், நம்பிக்கைகள், திட்டங்கள் அனைத்தும் இவைகளில் மையம் கொண்டிருக்கிறது. நம்முடைய வாழ்க்கையை ஊக்குவிப்பதற்கும், உபத்திரவங்களை நீடிய பொறுமையோடு சகிப்பதற்கான நம்பிக்கையும் நம்முடைய பொக்கிஷமாக உள்ளது. அநேகருக்கு, பொக்கிஷங்கள் உண்டு, ஆனால் அவைகள் சிறிய அளவில் அதிருப்தியை தரக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில் அவைகள் தற்காலிகமானதும், ஏமாற்றங்களை தரக்கூடியதாகவும் இருக்கிறது. எவ்வளவு பேர், இந்த உலகபிரகாரமான காரியங்களை நம்பி, மனக்கோட்டைகளை கட்டுகிறார்கள். ஆனால் மிகுந்த ஏமாற்றங்களும், சோதனைகளும் இருதயத்தை நொறுக்கி, விரக்தியில் ஆழ்த்திவிடுகிறது. சொத்து, புகழ், சமுதாய நிலை, வீடுகள், நிலங்கள், நண்பர்கள், வீடு, குடும்பம், வல்லமை மற்றும் செல்வாக்கு அனைத்தும் மாறக்கூடியவைகள். இப்படிப்பட்ட அழியக்கூடிய காரியங்களை நம்முடைய இருதயம் முதன்மையாக வைத்து, அவைகளை முழுமையாக நம்பி, தோல்வி அடையும் பட்சத்தில், இப்படிப்பட்ட காரியங்களை நம்மால் தாங்கமுடிகிறதில்லை.

சொத்தும், சுகமும், பல வருடங்களின் பாடுகளும், பல முயற்சிகளினால் பராமரித்தவைகளும் ஒரே இரவில் காணாமல் போய்விடலாம். நேர்மையாக பெறப்பட்ட புகழ்ச்சி, திடீர் என்று நிந்தையாக மாறலாம். உயர்வான இருக்கையில் அமரச் செய்த சமுதாயம், தாழ்ந்த இடத்தில் அமர்த்திவிடலாம். உங்கள் பேர் தேவையில்லாத தீமையான காரியங்களை கொண்டு தூஷிக்கப்படலாம். மிகவும் பாதுகாப்போடு பராமரிக்கப்பட்ட வீடுகளும், நிலங்களும் பணக்கார நாட்டாமைக்காரர்கள் புல்டோசரின் கீழ் காணப்படாமல் போகலாம். நீண்ட காலமாக நம்பிக்கொண்டிருந்த நண்பர்கள் திடீர் என்று உங்கள் எதிரிகளாக மாறலாம். மரணத்தினால் குடும்பங்கள் சிதறடிக்கப்படலாம். குடும்பத்தின் மேலிருக்கும் அன்பு, கொஞ்சம் கொஞ்சமானக தணிந்து, அவிந்தும் போகலாம். வாலிப நாட்களில் கொண்டிருந்த உயர்வான நம்பிக்கைகள் குறுகிய வருடங்களுக்குள் காணாமல் போய்விடலாம்.

### நொறுங்கிய இருதயங்களுக்கு கீலேயாத் தையலம்

"நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை ரட்சிக்கிறார்." (சங் 34:18) தங்களுடைய பாரங்களோடும், நொறுங்கிய இருதயங்களோடு அழைக்கப்படுகிறர்வர்களுக்கு தேவனுடைய இந்த வார்த்தைகள் விசேஷித்த வல்லமையோட காணப்படவேண்டும். வாழ்க்கையில் உபத்திரப்படுவோர், ஏமாற்றம் அடைந்தோர், அமைதலும், ஜீவனையும், சுகத்தையும் தேடி கிறிஸ்துவினிடம் இளைபாறுதலை தேடி வருபவர்களுக்கு அவருடைய அன்பும், வாக்குத்தத்தங்களும் நன்மையான கீலேயாத் தைலமாக இருக்கிறது. கடல் என்னும் வாழ்க்கையில், புயல் என்னும் உபத்திரவங்களில் அடிப்பட்டு தோல்வி அடைந்து, விரக்தி அடைந்து, நம்பிக்கையற்ற நிலையில் பெற்ற சகல அனுபவங்களும் நித்திய பாதுகாப்பான இடத்திற்கு வழிநடத்தும். உண்மையான ஆசீர்வாதங்களும் பாதுகாப்பும் இயேசுவிடம் மட்டுமே பெறமுடியும், இதுவே உண்மையான பொக்கிஷம், பூமிக்குரிய மேலான பொக்கிஷங்களை காட்டிலும் எவ்வளவு மேன்மையானதாக இது இருக்கிறது.

தேவனை கண்டடைந்த ஓர் அருமையான சகோதரரின் அனுபவத்தை நாம் பார்க்கலாம் ஐரோப்பிய யுத்தத்தில், பல வருடங்களாக சேர்த்து வைக்கப்பட்ட, பல வருடங்களுக்குண்டான சேமிப்புகள் காணாமல் போனது. சகலவிதமான நம்பிக்கையும் அற்ற நிலையில் தன்னுடைய கரங்களில் தன்னுடைய வாழ்க்கை முடித்து கொள்ளக்கூடிய சூழ்நிலைவந்தபோது, இன்றைய சத்தியம் அவருடைய கவனத்தை ஈர்த்தபோது அவர் மகிழ்ச்சி அடைந்தார். அதற்குபின் தேவன் சகலத்தையும் எதற்காக அனுமதித்தார் என்ற காரணத்தை அனைவரிடமும் கூறிவருகிறார். இவ்வளவு வேதனையான சூழ்நிலையிலும் எவ்வளவு மனமகிழ்ச்சியாக இருக்கிறார். "விலையுயர்ந்த முத்துக்காக" தன்னுடைய எல்லா காரியங்களையும் கொடுத்துவிட்டார். இதற்குப் பதிலாக சகல உலக பிரகாரமான பொக்கிஷங்களும் சென்று விட்டது.

உண்மையில், நம்முடைய நாட்களில்,இதுபோன்று காரியங்கள் நடப்பதில்லை. நல்ல சிந்தையில் இருப்போர் தங்களுடைய பாதங்களை கன்மலையின் மேல் நிறுத்துவார்கள். ஆனால் மணலுக்கு ஒப்பான உலக சொத்துக்களை நம்புவோர், தங்களுடைய நம்பிக்கை தோல்வி அடையும்போது, தடுமாறி, பிடிமானம் இல்லாமல் பயந்து அழிவை நினைத்து விரக்தி அடையவார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் கன்மலையின் வெடிப்பில் நம்முடைய பாதங்களுக்கு பிடிமானம் கிடைத்தால், எவ்வளவு பயங்கரமான புயலிலும் அசையாமல் நிற்கமுடியும். பரலோகத்தில் நாம் சேர்த்துவைக்கக்கூடிய பொக்கிஷங்கள் எவ்வளவு விலையேறபெற்றதாக இருக்கிறது பாருங்கள். ஏனெனில் இன்று நம்முடைய

பொக்கிஷம் பரலோகத்தில் மிக பாதுகாப்பாக உள்ளது. எந்த புயலும் அதை தொட முடியாது.

**பரலோகத்தில் நாம் சேர்த்து வைக்கும் பொக்கிஷங்கள்**

மிக பெரிய பொக்கிஷத்தை தேடும் யாவரும், கேட்கக்கூடிய முதல் கேள்வி என்னவெனில் - பரலோகத்தில் நாம் எவ்வாறு பொக்கிஷங்களை சேர்ப்பது? மேலும் எப்படிப்பட்ட பொக்கிஷங்களை நாம் அங்கு சேர்ப்பது பரிசுத்தமுள்ளதும், தூய்மையுள்ளதும் நன்மையான அனைத்து காரியங்களும் அங்கு ஏற்றுகொள்ளப்படும் என்ற வாக்குறுதி தெய்வீக வார்த்தைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. தேவனோடும், கிறிஸ்துவோடும் நாம் வைக்கக்கூடிய தெய்வீக அன்பும் தனிப்பட்ட ஐக்கியமும் பரலோகத்தில் நாம் சேர்க்கக்கூடிய மிக முக்கியமான பொக்கிஷங்களாகும். ஏனெனில் நம்முடைய நேசர் பதினாயிரம்பேர்களில் சிறந்தவராக இருக்கிறார். (உன்ன 5:10,16) நம்முடைய சந்தோஷம், துக்கம், ஆறுதல் மற்றும் தேவைகளின் போதெல்லாம் மாறாத இளைப்பாறுதல் தருகிறார்.

இப்படிப்பட்ட பொக்கிஷத்தை பெற்றவர்கள் - குளிர்ந்துவிடாததும், மரணம் கூட பிரிக்க முடியாததும், என்றும் மாறாத நித்திய அன்பை அடைந்து விடுகிறார்கள் "உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்; "கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருப்பவர்களுக்கு முன் அவர் சமூகம் எப்போதும் செல்லும். அவர்களை ஒன்றும் அணுகாது. (ரோ 8:35-39, 1சாமு 2:9, லூ 10:19, யாத் 33:14)

பூமியிலும், பரலோகத்திலும், கிறிஸ்துவினால் நேசிக்கப்பட்ட மணவாட்டியை தவிர வேறு ஒருவரும் இப்படிப்பட்ட விசேஷித்த இரக்கத்தை, பெறுவதில்லை. பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள முழு குடும்பங்களும் அவர் மூலமாக ஆசீர்வதிக்கப்படுகையில், அவருடைய மணவாட்டி மட்டுமே அவருடைய துணையாகவும், அவருடைய பொக்கிஷமாகவும் இருப்பாள். "குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்." (சங் 45:10, 11, உன்ன 4) என்று ஆண்டவர் மணவாட்டிக்கு அறிவுரை கூறுகிறார். இப்படிப்பட்ட மணவாளனுடைய அன்பையும், மகிமையையும், பெறுவதற்கு அபாத்திரராகிய நம்முடைய நிலையை உணரும்போது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது. நம்முடைய அபூரணங்களை கணக்கிடுகையில், இப்படிப்பட்ட மகிமைக்கு நாம் அழைக்கப்படுவதற்கு நாம் முற்றிலும் அபாத்திரமான வர்கள் என்பதை நாம் உணரலாம். தூதர்களில் எவ்வளவு பரிசுத்தமும் விசுவாசமுள்ளவர் களும் இருந்தபோதிலும், அழியக்கூடிய அபூரணமான நம்மை தேவன் தெரிந்து கொண்டார் !

இதில் ஏதாகிலும் தவறு உண்டா ? இல்லை. நிச்சயமாக இல்லை. வருங்காலத்தில் விழுந்துபோன மனுக்குலத்தின் பலவீனங்களையும், குறைகளையும் மேற்கொள்ள உதவி செய்யவும், அவர்களை தேவனோடு ஒப்புரவாக்குவதற்கும் தகுதியுள்ளவர்களை தம்முடைய குமாரனுடைய மணவாட்டிகளாக தேவன் தெரிந்துகொள்கிறார். ஏனெனில் அவர்கள் அநேக உபத்திரவங்களை மேற்கொண்டதினால், பலவீனப் பட்டவர்களின் மனநிலையை முழுமையாக உணர்ந்து, அவர்களுக்கு உதவிசெய்வார்கள். ஆட்டுக்குட்டியானவரின் மனைவி, உயர்த்தப்படும் எல்லை இல்லா உயரங்களை யாரால் அறிந்துகொள்ளமுடியும்? தங்களுடைய தகுதியினால் அல்ல, மனத்தாழ்மையுள்ளவர்களுக்கு, தேவனுடைய தெய்வீக கிருபையினால் மட்டுமே இந்தச் சிலாக்கியம் கிடைக்கும் என்று உணர்ந்து கொள்பவர்களே இந்நிலையை பெறுவார்கள். யேகோவா தேவனின் கண்களுக்கு முன்பாக, முழுமையாக பூரணப்பட்ட நாம், மகிமையான நிலையில் நிற்போம். சாந்தமும் அமைதலுமான ஆவியையும், எல்லா சூழ்நிலைகளிலும் விசுவாசத்தையும், பிதாவின் சித்தத்தை செய்வதில் உண்டாகும் மகிழ்ச்சியில் வெளிப்படும் அன்பையும், நம்முடைய இராஜாவும், மணவாளனும், நேசிக்கப்பட்டவரின் கண்களின் கிருபையும் பெற்றிருப்போம்.

இந்த நம்பிக்கையை கொண்டு, கிறிஸ்துவின் மூலம் நாம் பெற்றுள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களினால், எல்லையில்லா மகிழ்ச்சியை பெறலாம். நம்முடைய பரம அழைப்பை பெறுவதற்கான பெலன் நம்மிடத்தில் இராவிட்டாலும், நமக்குள் நற்கிரியைகளை துவக்கினவர் நாம் மகிமை அடையும் நாளில் அதை முடிக்கவும் வல்லவராக இருக்கிறார் என்ற தாழ்மையான நம்பிக்கையோடு இருக்கலாம். வரக்கூடிய காலங்களில், "பிதாவுக்கு முன் கறைதிரையற்றவர்களாக" பூரணப்பட்டு, மகிமை அடைந்து நியமிக்கப்பட்டிருக்கும் அற்புதமான வேலைகளில் நம்முடைய ஆண்டவரும், இராஜாவோடும் பங்கெடுப்பதற்கு, ஆயத்தப்படுவோம்.

**விசுவாசத்தை ஊக்குவித்தல்**

பிதாவும், குமாரனும் மணவாட்டியை ஊக்குவிப்பதற்காக சொல்லக்கூடிய சில ஆசீர்வதங்களையும் வாக்குத்தத்தங்களையும் கேட்போம் - "உன் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும், தூரத்திலுள்ள தேசத்தையும் பார்க்கும். "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு

வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது."" நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்."நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (ஏசா 33:17, மல் 3:17, வெளி 2:17, மத் 28:20, யோவா 14:3,15,16, வெளி 2:10, 3:21)

விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களையும், ஜீவனுக்குரிய அற்புதமான வார்த்தைகளையும், மேலும் மேலும் இவைகளை சிந்தித்துகொள்வதினால் அவைகளின் இனிமையான முக்கியத்துவங்கள் நம்முடைய இருதயத்தின் ஆழங்களுக்குள் புதைந்து, நம்முடைய வாழ்க்கையில் ஆசீர்வதிக்கப்பட்ட பலன்களை கொண்டுவரும். உண்மையில் நம்முடைய கண்கள் இராஜாவை அவருடைய மகிமையில் காணும் வரையில் குறிக்கப்பட்டிருக்கும் இடுக்கமான வழியில், இருளும் சோதனையான நேரத்தில், புதிப்பிக்கப்பட்ட வல்லமையோடும், தைரியத்தோடும், வைராக்கியத்தோடும் ஓடுவதற்கு நம்மை ஊக்குவிக்கக்கடவது. நாம் இந்த உலகத்தின் ஆடம்பரங்களையும் காணக்கூடிய அநித்தியமானவைகளையும் பொருள்படுத்தாததினால், நமக்காக பரலோகத்தில் எப்படிப்பட்ட அற்புதமான பொக்கிஷம் வைக்கப்பட்டிருக்கிறது என்று சிந்தித்து பாருங்கள். இப்படிப்பட்ட மகிமையை பெறுவதற்கு இக்காலத்தில் விநோதமான சோதனைகளையும், விசுவாசத்தின் பரிட்சைகளையும், எதிர்நோக்க வேண்டும் என்று அப்போஸ்தலர்கள் தெளிவாக கூறியுள்ளார்கள்.

அடுத்து, திரைக்கு அப்பால் செல்வதற்கு, தேவைப்படும் - நிருபிக்கப்பட்ட நீதிமானாக்கப்பட்ட நிலையே நாம் பரலோகத்தில் சேர்த்துவைக்கும் பொக்கிஷமாகும். உபத்திரவங்களை நீடிய பொறுமையோடு சகித்து, கடுமையான சோதனைகளிலும் மாறாத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கும் பட்சத்தில் நம்முடைய பொக்கிஷங்கள் மிகுதியாக சேர்க்கப்படும். சிந்தையில் உள்ள நல்ல குணங்களும் பரலோகத்தில் பொக்கிஷமாக சேர்க்கப்படும். உண்மையில்லாததும், பாதுகாப்பதற்கு அபாத்திரமானவைகளும் தேவனிடம் சேர்க்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. நாம் பரலோகத்தில் சேர்த்துவைக்கும் பொக்கிஷங்களானது, காலங்கள் சென்றாலும் எந்தச் சூழ்நிலையிலும் நித்தியமாக காக்கப்படும்.

இது ஆவிக்குரிய நிலையிலானாலும் சரி, மாம்சீக நிலையினாலும் சரி, சத்தியத்திலும் நீதியிலும், அஸ்திபாரம் போடப்பட்ட உண்மையான நட்புகளும் பொக்கிஷங்களாக இருக்கிறது. எடுத்து காட்டாக - ஆவிக்குரிய நிலையில் இருக்கும் ஒருவர், பழைய நண்பரின் கனிவான உபசரிப்பை என்றும் மறக்க முடியாது. வாழ்க்கை என்னும் பாலைவனத்திலே புழுதியோடும், வெப்பத்தோடும் போராடிக்கொண்டிருப்பவருக்கும் தேவைப்படும் போதெல்லாம் தண்ணீர் கொடுத்த நபரை எளிதில் மறந்துவிடக்கூடுமா ?

ஆனால் ஆவிக்குரிய நட்பு செழித்து, பூத்து குலுங்கும் காரியங்கள், பரலோகத்தில் நாட்டப்படும் போது இன்னும் இனிமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். ஜீவ தண்ணீரையும் ஜீவனுக்குரிய அப்பத்தை தேவைப்படும் போதெல்லாம் கொடுத்தவர்களின் அன்பும் கனிவும் எப்படிப்பட்ட பொக்கிஷங்களாக பரலோகத்தில் சேர்க்கப்படும். திரைக்கு அப்பால் நம்முடைய விசுவாசத்தின் பலனாக சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷங்களை பார்த்து நாம் பெறக்கூடிய மகிழ்ச்சியை யாரால் அளவிடக்கூடும் ? இந்தப் பொக்கிஷங்களை தெளிவான கண்களோடு கண்டும், நித்தியத்திற்கும் இவை அனைத்தும் நம்முடையவைகளே என்று உணரும்போது, நாம் இந்த உலக பிரகாரமான வாழ்க்கையில் பட்டபாடுகளுக்கும், வேதனைகளுக்கும் பலமடங்கான பலனை பெற்றுவிட்டோம் என்பதை உணராமல் இருப்போமா ?

**பரலோக வாசிகள்கிட்டிச்சேருகிறார்கள்**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே நம்முடைய கண்களை பரலோகத்தில் உள்ள நித்தியமானவைகளின் மேல் வைப்போம். "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை." (மத் 6 :20) நம்முடைய சிந்தை பரலோக பொக்கிஷங்களின் மேல் நோக்கமாக இருந்தால், இவ்வாழ்க்கைக்குரிய ஏமாற்றங்களும் பிரச்சனைகளும் நம்மை மேற்கொள்ளாது. தேவனுடைய ஆவிக்குரிய குமாரர்களாக பாத்திரமாக இருப்பதே நம்முடைய உண்மையான பொக்கிஷம். இப்படியிருக்க சில நொடியில் மறையும் நீர் குமிழ் போலிருக்கும் உலக வாழ்க்கைக்காக நாம் ஏன் கவலைப்படவேண்டும். இவைகளை நமக்குள் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடுவதற்கு பாத்திரமில்லை. நம்முடைய நம்பிக்கையின் இலக்காக பரலோகம் செல்லும்வரையில் இடறாதபடிக்கு கையில் பிடித்திருக்கும் தடியை ஊன்றி நடப்போம்.

ஒவ்வொரு நாளும் சூரியன் மறைகையில், நம்மை சுற்றி நிழல் சூழ்ந்துவிடுகிறது. நாம் மலை உச்சியை நெருங்கிவிட்டோம். நம்முடைய பயணம் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறதென்று ஒவ்வொரு நாளும் அநேக ஆதாரங்கள் காணப்படுகிறது. நாம் செல்ல வேண்டிய பாதை எவ்வளவு தூரம் என்று நமக்கு தெரியாது. அதை அறியாமல் இருப்பதே நலமானதாக இருக்கும். ஆனால் நாம் சேரவேண்டிய இடம் வெகு தூரத்தில் இல்லை.

விலையேறப் பெற்ற இயேசு

# அவர் விலையேறப் பெற்றவர்

ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அவர் விலையேறப்பெற்றவர் -1பேதுரு 2:7



Thomas Holmes

தேவனுக்கு முன் விலையேறப்பெற்றவராகவும், வருங்காலத்தில் எல்லா மனுஷருக்கு முன் கனம் பொருந்தினவருமாகவும் நிற்ப்பார். எல்லாவற்றிலும் சிறந்தவரும், ஒப்பற்றவருமாக நம்முடைய இயேசு காணப்படுவார். தேவனுடைய திட்டத்தில், அவருடைய பிரசன்னம் தவிர்க்க இயலாததும், மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அவரை இல்லாமல் மீதியிருப்போர் ஒன்றும் செய்ய இயலாது. இஸ்ரயேலின் தேவன் நித்தியமாக வாசம் செய்வதற்கு, "கிறிஸ்துவுக்குள்", "கிறிஸ்துவினாலும்" கர்த்தராகிய ஆண்டவருக்கு ஆவிக்குரிய வாசஸ்தலத்தை எழுப்புவார்கள்.

கற்களுக்கு ஒப்பிடுகையில் எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்ததும், தனித்துவம் வாய்ந்த விலையேறப்பெற்ற இடத்தையும் மதிப்பையும் இயேசு பெற்றிருக்கிறார். இப்படிப்பட்டவரை நாம் சொந்தம் கொண்டாடுவதில் எவ்வளவு மகிழ்ச்சி அடையலாம். தெரிந்துக்கொள்ளப்பட்ட, அந்த விலையுயர்ந்த மூலைக் கல்லுக்காக நாம் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.

### பூமிக்குரிய காரியங்களை, பரலோகத்திற்குரிய காரியங்களோடு ஒப்பிடுதல்

"விலையுயர்ந்த" என்ற வார்த்தைக்கு - "மதிப்புள்ள, அசாதாரண" என்று விளக்கம் கொடுக்கப்படுகிறது. அரிதான பொருட்களையும் விலையேறப்பெற்றது என்று கூறுவார்கள். உடனடியாக ஒருவர் பூமிக்குரிய பொன், வெள்ளி, பிளாட்டினம், இன்னும் மற்ற விலையேறப்பெற்ற இரத்தினங்களை நினைவுக்கு கொண்டு வரலாம். இவைகள் தேடிப்பிடிப்பது அரிதானதால் மிக உயர்வாக மதிப்பிடப்படுகிறது. மேலும், விலையுயர்ந்த கலைப்பொருட்கள் உண்டு, ஒவியங்கள் உண்டு, பாடகர்களின் தொகுப்புகள் உண்டு, சிற்பங்கள் உண்டு - அனைத்தும் அரிதாக இருப்பதினால், விலையுயர்ந்தாக காணப்படுகிறது. அவைகள் அழகாகவும் நேர்த்தியாகவும் இருப்பதினால் மதிப்புமிக்கதாக இருக்கிறது.

ஆனால் உண்மையான விலையுயர்ந்த மற்ற காரியங்களும் உண்டு, நெருங்கிய சிநேகிதனின் அன்பு, நண்பன் மேல் வைக்கும் நம்பிக்கை, நம்மோடு உபத்திரவப்படுபவர் மேல் வரும் பரிவு, உதவும் கரங்களின் உற்சாகம் - இவைகள் அனைத்தும் இரத்தினக்கற்களுக்கும், பொன்னும், வைரத்தைக் காட்டிலும் விலையேறப் பெற்றதாக இருக்கிறது. யோனாத்தானும் தாவீதும் கொண்டிருந்த நட்ப்பின் மதிப்பை யாரால் விவரிக்கமுடியும். மனித வாழ்க்கையில் இவைகளே விலையேறப்பெற்ற காரியங்கள். மேலும் சந்தோஷத்தை சுதந்தரித்துக் கொள்ளும் இருதயமே மகிழ்ச்சியாக இருக்கும்.

இப்படிப்பட்ட காரியங்கள் மனித இருதயத்தில் மிக சிறப்பான முறையில் உருவாக்கப்படுகிறது. ஆனால் உதிக்கும் சூரியனுக்கு முன் மறைந்து விடுகிற நட்சத்திரங்களுக்கு ஒப்பாக ஆட்டுக் குட்டியானவரின் குணலட்சணங்களுக்குமுன் இவைகள் மறைந்து விடுகிறது. இப்போது சகோதரர்களின் தேவைக்காக நம்முடைய ஆண்டவர் தந்திட்ட விலையேறப்பெற்ற காரியத்தைக் குறித்து பேதுரு சொல்லுவதை வாசிக்கலாம் - " உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." (1பேதுரு 1:18,19) "அழிந்துப்போகிற பொன்னும் வெள்ளியும்" என்று வாசிக்கிறோம். பொன்னும் வெள்ளியும், விலையேறப்பெற்ற கற்களும், யுகங்கள் செல்ல செல்ல அழிந்துவிடும். ஆனால் பல சோதனைகளில் நிலை நிற்க துணைச்செய்து, நம்மை இரட்சித்து, காலங்கள் மாறினாலும், மங்காததும் குறையாததுமான மதிப்புள்ள பொக்கிஷம் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

பேதுருவின் உவமானத்தை மனதில் வைத்தவர்களாக எபிரெயர்களின் வரலாற்றில் நடந்த, அந்தப் பயங்கரமான நாளை திரும்பிப் பார்ப்போம். வீட்டு நிலை வாசலின் மேற் சட்டத்தில் பழுதற்ற ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்டதினால், அந்த வீட்டில் உள்ள தலைச்சன் பிள்ளைகள் மீட்கப்பட்டார்கள். ஒருவேளை அந்த வீட்டின் நிலை வாசலின் மேற்ச்சட்டத்தில் பொன்னும் வெள்ளியும், விலையுயர்ந்த இரத்தினங்களைக் கட்டி வைத்திருந்தால், தலைச்சன் பிள்ளைகள் மீட்கப்பட்டிருப்பார்களா ? நிச்சயமாக இல்லை, எகிப்தில் சங்காரம் நடந்தது போல, இஸ்ரயேலர்களின் வீட்டிலும் சங்காரம் நடந்திருக்கும். ஆகவே விலையுயர்ந்த பொன்னும் வெள்ளியும் இரத்தினங்களும், சிந்தப்பட்ட இரத்தத்திற்கு எந்த விதத்திலும் ஒப்பானதல்ல. ஏனெனில், தலைச்சன் பிள்ளைகளை மீட்கக்கூடிய வல்லமையும் மதிப்பும் ஆட்டுக்குட்டியின் இரத்தத்திற்கு மட்டுமே கொடுக்கப்பட்டது மாறாக, விலையுயர்ந்த பொருட் களுக்கு அல்ல என்பதை தெளிவாக இந்தச் சம்பவம் சுட்டிக்காட்டுகிறது.

### வேறொன்றுமில்லை, இயேசுவின் இரத்தம் மட்டுமே

"அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" என்று எவ்வளவு அழகாகவும், வல்லமையாகவும், மாம்சத்திலிருக்கும் சகோதரர்கள் மீட்கப்பட்டதை குறித்து பேதுரு எடுத்துக்காட்டுகிறார். அவர்களின் சொத்துக்களை முழுமையாக திரட்டியிருந்தாலும், இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம் செய்த காரியங்களை அவைகளினால் செய்திருக்க முடியாது.

"வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின்கீழாவது, ஒருவனும் ….. கூடாதிருந்தது. " (வெளி 5:3-5) என்று ஒப்பற்ற நிலையில், ஆத்துமாக்களை இரட்சிக்க ஆட்டுக்குட்டியானவர் பாத்திரவானாக இருந்தார். அவர் அபூர்வமானவரும், தனித்துவம் வாய்ந்தவரும், அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் வெற்றி சிறந்தவருமாக இருக்கிறார் !

மாம்ச இஸ்ரயேலர்களுக்கு எந்த அளவுக்கு அவருடைய ஈடுபலி தேவைப்பட்டதோ, அந்த அளவுக்கு எந்த விதத்திலும், கொஞ்சம் கூட குறையாமல் நமக்கும் தேவைப்படுகிறது. சுபாவ கிளைகளை வெட்டி, அவைகள் இருந்த இடத்தில், நம்மை ஒட்டவைக்கும் அளவுக்கு நமக்கும் இயேசுவின் ஈடுபலி மிகவும் அவசியமானது. (ரோம 11:17-24) நல்ல ஒலிவ கிளைகளை வெட்டிவிட்டு, காட்டு ஒலிவ கிளைகளாகிய நம்மை ஒட்டவைப்பதற்கு ஏதாகிலும் அவசியம் உண்டா ? நிச்சயமாக இல்லை. ஆகிலும், புறஜாதியாரும், அதே விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டு, உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார். (1பேது 1: 21 )

### "கடந்த நாட்களை நினைவுக்கூறுதலுக்குண்டான அழைப்பு"

வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இந்த நாட்களில், அநீதியுள்ள நாம், தேவனிடம் எவ்வாறு கொண்டு வரப்பட்டோம் என்பதை மறந்துவிடக்கூடாது. (1பேது 3:18) ஏனெனில், நம்முடைய அன்றாட வாழ்க்கையில் இவைகளை எளிதில் மறக்க வாய்ப்புகள் உண்டு. அதாவது நாம் நம்முடைய உண்மையான கிறிஸ்துவ வாழ்க்கையின் துவக்கப் படிகளை மறந்துவிடலாம். நம்முடைய மகிழ்ச்சிகரமான இருதயத்திற்கு ஆட்டுக்குட்டியானவரின் விசேஷித்த இரத்தம் உண்மையில் விலையேறப்பெற்றதாக துவக்கத்தில் கண்டு உணரப்பட்டாலும் காலப்போக்கில் அவைகள் குறைந்து, மறக்கப்பட்டும் போகலாம். கடந்த வருடங்களில், மேய்ப்பரின் நெருக்கமும், அவருடைய விலையுயர்ந்த குணங்களும் நமக்குள் பல்லாயிரம் மடங்கு, அதிகரிக்கவில்லை என்றால் மிகவும் வெட்கப்படவேண்டியதாக இருக்கும்.

இதே சத்தியத்தை வேறு வசனங்களில் தேடுவோமானால் , " நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்." (1பேது 2:24) என்று பேதுரு சகோதரர்களுக்கு நினைப்பூட்டுகிறார் தொடர்ந்து "சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்." என்றும் கூறுகிறார்.

### ஒரே மந்தை ஒரே மேய்ப்பன்

மேசியாவின் பாரங்களை மீண்டும் மீண்டுமாக ஏசாவின் புஸ்தகம் எதிரொலிக்கிறது. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் என்று இயேசுவை அடையாளப்படுத்தும் தீர்க்கதரிசன சுருக்கத்தை பேதுரு தன்னுடைய சிந்தையில் வைத்தவராக நிரூபங்களை எழுதினார் என்று சகோதரர்கள் அறிந்திருந்தார்கள். செம்மையான பாதையிலிருந்து வழிவிலகி தங்களுடைய சொந்த வழிகளில் சென்ற ஆடுகளை போலானார்கள். இவர்களின் அக்கிரமத்தை தேவன் இயேசுவின் மேல் சுமத்தினார். இப்போது தேவன் குறித்தக் காலத்தில், தங்களுடைய ஆத்துமாக்களைப் பராமரிக்கக்கூடிய மேய்ப்பரிடம் அவருடைய கிருபையினால் "திரும்பினார்கள்."

ஏசாயாவின் துக்ககரமான வார்த்தைகளை சரியாக புரிந்துக்கொள்வதற்கு தேவையான செயல்முறை விளக்கத்தை பேதுரு கொடுக்கிறார். முக்கியமாக சுற்றித் திரியும் யூதர்களுக்காக இந்த தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டது என்று துல்லியமான குறிப்புகள் உண்டு. ஆகவே தெய்வீக பராமரிப்பின் கீழ் அவர்களின் "திரும்புதலை" குறித்து மிக உணர்ச்சி வசமாக சொல்லப்படுகிறது. புறஜாதிகளும் இந்த தீர்க்கதரிசனப் பகுதியை தங்களுக்கென்று பொருத்திக் கொள்ளலாம். ஆனால் இந்தத் தீர்க்கதரிசனத்தை உரைத்த தீர்க்கதரிசி இஸ்ரயேலுக்காக மட்டுமே தீர்க்கதரிசனம் உரைத்தார். மேலும் குறிப்பாக இஸ்ரயேலில் மீதியிருப்பவர்களை நோக்கி "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்;" என்று உண்மையில் சொல்லப்படுகிறது.

நாமும் அல்லது நம்முடைய மூதாதையர்களாகிய புற ஜாதிகளும், ஜீவனுள்ள மெய்த் தேவனை தொழுதுக்கொள்ள விக்கிரகங்களிடமிருந்து திரும்பினோம் என்பது மெய் தான். அதாவது நம்முடைய பாவங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு நாம் இயேசுவிடம் வந்தோம். ஆனால் அதே நேரத்தில் இந்த முழு மனுக்குலமும் தேவனிடத்திற்கும், இயேசுவினிடத்திற்கும் அவருடைய பராமரிப்பின் கீழ்

இருக்கும் தெய்வீக மந்தையிடனிதிற்கும் திரும்பினார்கள் என்று கூறுவது மிக தவறு. ஏனெனில், புறஜாதிகள் தேவன் அற்றவர்களும், நம்பிக்கை இல்லாதவர்களுமாக இந்த உலகத்தில் ஜீவிக்கிறார்கள். இஸ்ரயேலர்களோவென்றால், தேவனுடைய சொந்த ஜாதியும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அன்பான ஆத்துமாக்களுக்கு பேதுரு சொன்ன வார்த்தைகள், ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை உண்மையில் விலையேறப்பெற்றதாக காட்டுகிறது. மேலும் ஒப்பற்ற இயேசுவின் பாடுகளுக்கு அவர்களை நடத்தியது. இப்படியாக பிரிந்துப்போன யூதர்கள் தெய்வீக மந்தையின் முக்கிய மையமாக இருந்தனர். ஏற்றக்காலத்தில் உலகத்தின் புறஜாதிகளும், விசுவாசிகளாக சேர்க்கப்பட்டு, ஒரே மந்தையும் - ஒரு புதிய மந்தையாக - ஒரே மேய்ப்பனின் கீழ் சேர்க்கப்பட்டார்கள்.

### மேய்ப்பனின் மேன்மையான பராமரிப்புக்கு காட்டப்படும் நன்றிகள்

நாம் மீட்கப்பட்டு, ஜீவனுள்ள தேவனிடத்தில் திரும்புவதற்கு, இயேசு மிகவும் விலையேறப்பெற்றவராக இருந்ததால், நிச்சயமாக அவருடைய தெய்வீக பராமரிப்பின் கீழ் இருக்கும் ஒவ்வொருவருக்கும் அவர் விலையேறப்பெற்றவராக இருப்பார். கிழக்கு தேசத்தில் பயணித்தவர்கள், இரவில் கண்ணுறங்காமல், மிக பாசத்தோடு மந்தைகளைக் காக்கும் மேய்ப்பர்களைக் குறித்து ஆச்சரியமாக கூறுவார்கள். மந்தையின் வாசலை காவல் காத்து, அவர்களை சிறப்பாக பாதுக்காப்பார்கள். அந்த மேய்ப்பன் மந்தைக்குள் நடக்கும்போது சில ஆடுகள் அவரின் கால்களோடு உரசிக்கொண்டு நடப்பதை மேய்ப்பன் கவனிக்கும்போது, அவருக்கு நன்றி சொல்லும் விதத்தில் மௌனமாக அவரை பார்க்கும். பொதுவாக எல்லா ஆடுகளும் மேய்ப்பன் குரல் கேட்டு பயமின்றி நம்பிக்கையோடு, எதிர்பார்ப்புகளோடு அவரை சுற்றி மண்டியிடுவது வழக்கம். இவ்வளவு நம்பிக்கையுள்ள அந்த ஜீவன்கள் தங்களுடைய விசுவாசத்தையும், மேய்ப்பன் மேல் வைத்திருக்கும் உயர்ந்த உணர்வுகளையும் இதை காட்டிலும் எந்த விதத்தில் வெளிப்படுத்த முடியும்?

இப்படியாக செயல்படவேண்டிய சகோதரர்களுக்கு ஆண்டவரின் அன்பான வார்த்தைகளை பேதுரு மதுரமான நினைவுகளாக நீண்ட காலமாக மனதில் வைத்திருந்தார்.

### மூன்று விதங்களில் நோக்கத்தைப் பூர்த்தி செய்தல்

"நல்ல மேய்ப்பரின்" விலையேறப்பெற்ற கோரிக்கைகளின் தொகுப்பை பேதுரு வரிசைப்படுத்தினார். "நானே நல்ல மேய்ப்பன்." மேலும் .... பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். (யோவ 10:14,15) என்று இயேசு கூறினார். இப்படியாக தம்முடைய சிந்தையில் ஊடுருவிய ஆண்டவரின் வார்த்தைகளை தக்கவைத்துக்கொண்டு, அவருடைய மீட்பின் காரியங்களை குறித்து பேச துவங்கினார். அடுத்து நாம் அனைவரும் ஆடுகளாக இருந்தோம் என்பதை மூப்பர்களுக்கு நினைப்பூட்டினார். " உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். " (1பேது 5:2-4) இப்படியாக, இயேசுவே பிரதான மேய்ப்பனும், நம்முடைய ஆத்துமாக்களுக்கு ஏற்ற கண்காணி என்றும் பேதுரு நினைப்பூட்டுகிறார்.

பூமிக்குரிய நாட்களில் தன்னை "நல்ல மேய்ப்பர்" என்ற கனத்தை பெற்றவர் இப்போது பிரதான மேய்ப்பராக நமக்கு முன் நிற்கிறார். "பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன்," எபி 13:20 "நல்ல மேய்ப்பன், பெரிய மேய்ப்பன், பிரதான மேய்ப்பன்" - இப்படியாக தம்முடைய மந்தைக்கு மூன்று விதமான பொறுப்புகளை நிறைவேற்றும் நம்முடைய அன்பான ஆண்டவர் எவ்வளவு அருமையாக செயல்படுகிறார்.

நாமும் இந்த மேய்ப்பனின் பராமரிப்பை பெறுவதற்கு விரும்பினதால், "ஒரே மந்தையில்" ஏற்றுக்கொள்ளப்பட்டோம். ஏனெனில் நாமும் பசுமையான சத்தியத்திற்கு மிக ஆவலோடு காத்திருந்தோம். விசுவாசமுள்ள நாம் உட்பிரவேசிப்பதற்காக விசுவாசத்தில் குறைவுள்ள யூதர்கள், மந்தையிலிருந்து வெளியேற்றப்பட்டது போல,கனிக் கொடாத நல்ல ஒலிவ மரத்தின் கிளைகள் வெட்டப்பட்டு, காட்டு ஒலிவ மரத்தின் கிளைகள் அதன் இடத்தில் ஒட்டவைக்கப்பட்டது. இப்போது காட்டு ஒலிவ மரக்கிளைகள் நல்ல ஒலிவ மரத்தின் சாறுக்கு பங்காளிகளானது. (ரோ 11:17-24) ஒருகாலத்தில் தூரமாயிருந்த சிலர், சமீபமாயிருந்த சிலரோடு சேர்க்கப்பட்டார்கள். மேலும், இப்பொழுது ஒரே ஆவியினாலே, பரலோக பிதாவோடு ஒருமித்து செயல்படுகிறார்கள். (எபே 2:17-18) அனைவருக்கும் இரட்சகரானவர், ஒரே கர்த்தரானார். (ரோ 10:12)

இப்படியாக, நாம் அனைவரும் ஒரே மந்தையானோம். மாம்ச இஸ்ரயேலரின் மீதியானவரோடு, மேய்ப்பனின் பராமரிப்பைப் பெற்றோம். நமக்கும் அவர்களுக்கும் நல்ல, மேய்ப்பனின் கோலும் தடியும் வழிநடத்தக்கூடிய கருவிகளாகவும், பரலோக பாதுகாப்பின் அடையாளமாகவும் இருக்கிறது.

பரலோக மந்தையின் ஒவ்வொரு நபரும் - "என் மேய்ப்பன் விலையேறப்பெற்றவர், எனக்கு அவர் மிகவும் விசேஷித்தவர்" என்று கூறலாம். "நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே

நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் ! சங்.23

### ஜீவ தண்ணீர் ஊறும் ஒரே நீரூற்று

என்னுடைய ஆத்துமா பரலோக பானங்களைப் பருகுவதற்கு வாஞ்சையாக உள்ளதா அல்லது ஆவிக்குரிய உணவுகளின் குறைபாடுகளினால் பலவீனப்பட்டிருக்கிறேனா ? என்னுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அவரால் மட்டுமே முடியும். இல்லாவிடில் என்னுடைய உடன்படிக்கைகளை விட்டு விலகி தனிமையில் நான் சுற்றித் திரிந்திருப்பேன். நான் திசைக் கெட்டலையும்போது, என்னுடைய தேவைகளை பூர்த்திச் செய்து சீர்ப்படுத்த யாரால் கூடும் ? என்னுடைய நண்பர்களும் என்னைப்போல சுற்றித் திரிந்து கொண்டிருக்கலாம். இவர்கள் என்னை சரியான பாதையில் நடத்த முடியுமா ? துக்கம் என்னுடைய வானங்களை இருள் அடைய செய்யும். என்னையும் என்னுடைய துக்கத்தையும் சுமந்து செல்ல எனக்கு ஒருவர் வேண்டும். என் ஆத்துமாவுக்கு ஆறுதல் அளித்து, பலன் கொடுக்க பூமிக்குரிய நண்பர்களால் கூடுமா ?

மாம்சத்தின் எந்த உதவிகளும், என்னுடைய துக்கங்களை நீக்கமுடியாது என்பதை என்னுடைய அனுபவங்கள் எனக்கு கற்பிக்க வேண்டும். வாழ்க்கையின் விரக்திகளிலும், ஆழமான துக்கங்களிலும் ஆண்டவர் மட்டுமே எனக்கு ஆறுதல் அளித்து, மரணம் வரைக்கும் நீதியின் பாதையில் நடத்த முடியும். என்னுடைய இருதயம் அவருக்கு நேராக உயர்த்தப்படுவதற்கும். என்னுடைய ஜெபங்கள் அவரால் கேட்கப்படுகிறது என்று நம்புவதற்கும், என்னுடைய தேவைகளை பூர்த்தி செய்வார் என்று விசுவாசிப்பதற்கும் நம்முடைய அனுபவங்கள் நம்மை வழிநடத்தும். மேய்ப்பனை நோக்கி ஆடுகள் செல்வதை போல நாம் உடனடியாகவும், நேரடியாகவும் அவரை நோக்கிச் செல்லவேண்டும். தேவனால் நியமிக்கப்பட்ட அவரை தவிர வேறு யாராலும் நமக்குரிய காரியங்களைச் செய்ய இயலாது என்று உணரவேண்டும். என்னுடைய வாழ்க்கையில் அவருடைய பாதுகாப்பான பராமரிப்பு வளையங்களால் நாம் காக்கப்படுகிறோம். இப்படிப்பட்ட காரியத்தை செய்ய அவரால் மட்டுமே கூடும். இதை நான் உணரும்போது - "என் இரட்சகர், என் மேய்ப்பர் எனக்கு மிகவும் விலையேறப்பெற்றவர்" என்று உண்மையில் நாம் கூறலாம்.

இந்த உபத்திரவமான நாட்களில் ஐக்கியங்கள் முறிந்துப் போகும் போது, அன்பினால் மீண்டும் அது கட்டப்படவேண்டும். பிரச்சனைகளும், கருத்து வேறுபாடுகள் வரும் பட்சத்தில் என்ன செய்வது ? நாம் என்ன செய்தால் பிரச்சனைகள் தீரும் ? ஒரே ஒரு காரியத்தை மட்டுமே செய்யவேண்டும். பிரதான மேய்ப்பனை அவருடைய ஸ்தானத்தில் கொண்டு வாருங்கள். அவர் நம்முடைய நல்ல மேய்ப்பனாக வழிநடத்தட்டும். மந்தைக்குள்ளிருக்கும் சகல ஆடுகளும் - ஒவ்வொரு சகோதர சகோதிரிகளும் இவ்விதமாக செயல்ப்பட்டால் சகலமும் சரியான நிலைக்கு வந்துவிடும். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ஆண்டவரை நம்முடைய மேய்ப்பராகவும், கண்காணியாகவும் நமக்குள் அனுமதித்து ஏற்றுக்கொள்ளும் போது தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொதுவான சபையிலும் சகலமும் சீர்ப்பொருந்தும். இந்தச் சத்தியத்தை அறிந்த ஒவ்வொருவரும், தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில் அனுபவங்களை பெற்றப்பின் நமக்கும் சபைக்கும் உண்மையில் இயேசு விலையேறப்பெற்ற ஒப்பற்றவர் என்பதை ஒத்துக் கொள்வோம்.

நாம் எந்தச் சூழ்நிலையிலும் விரக்தி அடையாமல், இக்காலத்தில் நம்முடைய இருதயங்களில் அவருடைய கிரியைகள் தடையின்றி, செயல்படுவதை நாம் புரிந்துக்கொள்வதற்கு தேவன் வாய்ப்பளித்திருக் கிறார். விசுவாசத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டு, கடைசி காலத்தில் இரட்சிப்புக்காக, ஆயத்தமாகிகொண்டிருக் கிறோம். இப்படியாக அவருடைய மந்தையிலிருக்கும் ஒவ்வொருவருக்கும், நம்முடைய மேய்ப்பன் விலையேறப்பெற்ற இரட்சகராக இருக்கிறார். சகலவிதமான புரிந்துக் கொள்ளுதலுக்கும், அவருடைய நாமத்தை அன்போடு அழைப்பவர்களின் அன்பிற்கும் பாத்திரமாக இருப்பவரும் அவரே.